374

374

மகாகவி ராஸீன்

2668

JEAN RACINE

(FRENCH POET & PLAYWRIGHT)

OFFICE OF THE REGISTRAR OF
5 MAR 1943
MADRAS

யோகி

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

மகாகவி ராஸீன்

374

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 MAR 1943
MADRAS

2668

JEAN RACINE

(The Famous French Poet and Classical Playwright)

விலை ரூ. 1—4—0

மகாகவி ராஸீன்

(பிரெஞ்சுக் கவியரசன்)

(JEAN RACINE)

[வரலாறும், நாடகக் கதைகளும்]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 MAR 1943
MADRAS

928·41

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா
1943

முதற் பதிப்பு: ஜனவரி, 1943

0122,1ய

928.41

உரிமை பதிவுற்றது

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

பதிப்புரை

ஃபிரான்ஸின் மகாகவி **ராஸீன்**: அவன் நாடகங்கள், **'சாகுந்தலம்'** போலச் சொல்லழகும், பொருளாழமும், நடையினிமையும், கலைச்சுவையும் ததும்பும்; அவன் வரலாறும், கருணையும் கண்ணீரும் கலந்த கலைவெள்ளந்தான்!

ராஸீன் வரலாற்றையும், அவன் எழுதிய சிறந்த நாடகக் கதைகளையும் அவன் நடையிலேயே எழுதி **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்கள் தமிழருக்கு இன்று அளிக்கிறார்கள். அடிகள், ஃபிரெஞ்சு மொழியில் கவிப்புலமை பெற்றவர்கள் என்பதைப் பலர் அறிவர்.

ஃபிரெஞ்சுக்கடுத்தபடி, இப்போது தமிழிலேதான், ராஸீனைப் பற்றி இத்தகைய அரியநூல் வெளி வருகிறது.

இறைவன் அருளும், அன்பர் அன்பும், ஆதரவும் மேன்மேலும் எம்மைத் தமிழ்ப் பணியில் ஊக்குக.

இராமச்சந்திரபுரம்
31—1—1943 } அன்பு நிலயத்தார்.

ரு௬—௧—௭௰

பொருளடக்கம்

	பக்கம்
பதிப்புரை	7
I. ராஸீன் வரலாறு	11
II. நாடகக் கதைகள் :	
(1) பேதுரி	61
(2) பூசாரி செய்த புரட்சி	90
(3) அலெக்சாந்தர்	111
(4) எஸ்தர் அல்லது யூதவுத்தமி	118



மகாகவி ராஸீன்

மகாகவி ராஸீன்

I. ராஸீன் வரலாறு

1. லூயி மன்னன் (XIV)

ஃபிரெஞ்சு மன்னருள், 14-ஆம் லூயி மன்னன் பெரும்புகழ் பெற்றவன். கி. பி. 1648-முதல் 1715-வரையில், (67 ஆண்டுகள்) அவனே ஃபிரான்ஸா யிருந்தான்: "நானே நாடு; நானே கடவுளின் பிரதிநிதி" என்பது அவனது செருக்குரை. எத்தனையோ குலாமிகளும், காக்கைபிடிக்கிகளும், இடம்பாசாரிகளும் அவனுக்குத் தூபம் போட்டுவிட்டனர். அரசன் சலுகை போதும்—என்ன வேண்டுமானலும் நடக்கும்; யாரை வேண்டுமானலும் வாழ்த்தலாம், வீழ்த்தலாம், அடுக்கலாம், கெடுக்கலாம்: இதுவே, அக்கால நிலை! செல்வர் இடம்பச் செருக்கு, அக்காலமே பின்வரும் இரத்தப் புரட்சிக்கு அடிகோலி விட்டது.

2. புலவர் மணிகள்

லூயி கம்பீரமான அரசன். ஃபிரான்ஸில் முடியரசு போய், குடியரசு வந்து, தடியரசு நடக்கிறது; ஆனல், என்றும் **பதினன்காம்** லூயியை மறக்கமுடியாது: அவன் கலாரசிகன்; கலைவாணர் கற்பகம்! புகழ்பெற்ற புலவர் மணிகள் அவன் காலத்தில் விளங்கினர்: **மோலியர், கொர்நெல், ராஸீன், லாஃபோந்தேன், பாலு, ப்ருவேர், ரோஷ் ஃபுகார்து, பாஸ்கல்** முதலியோர். அக்காலத்தில் புதுமலர்ச்சி பெற்ற ஃபிரெஞ்சு நாடகக் கலை, இன்னும் புகழ்மணம் வீசுகிறது. ராஸீன், கொர்நெல், மோலியர் ஆகிய மூவரும் ஃபிரெஞ்சு **நாடக மும்மணிகள்.** இவர்கள் லூயி காலத்தின் கலைக்கனிகள்; உலகுள்ளளவும் இவர்கள் புகழ் நிலவும். அவரவர் நிலையில் அவரவர் கலையரசரே: மோலியர் நகைச்சுவை ததும்பும் சமுதாய நாடகங்கள் எழுதினன். கொர்நெல் உரோம் வீரர் பெருமையை வீரக் கனல் நடையில் அரங்கேற்றினன். ராஸீன் கிரேக்க வீரர் புகழை நாடகமாக இயற்றினன்.

---

3. ராஸீன்

ராஸீன் *21—12—1639*-ல்* பிறந்தான். அவனையே ஃபிரெஞ்சுப் புலவர், '**கவியரசன்**'

---

* அஃதாவது ஷேக்ஸ்பியர் இறந்து 23 ஆண்டுகளுக்குப் பின் ராஸீன் பிறந்தான். ஷேக்ஸ்பியர், 1616-ல் இறந்தார்.



பெர்தேமிலானில் ராஸீன் பிறந்த வீடு
(Ferte-Milon—1639)

என்பர். ராஸீனை ஷேக்ஸ்பியருக்கு இணையாகச் சொல்ல முடியாது; ஆனால், காளிதாஸனின் தெளிவும், காம்பீர்யமும் அவனிடம் உள்ளன. ஃபிரெஞ்சுக் கவிதையைப் பொறுத்த வரையில், அவனை யாரும் இன்னும் மிஞ்சவில்லை; அவ்வளவு இனிய சுவை, அளந்த சொல், 'இன்னும், இன்னும்' என்று படிக்கத் தூண்டும் கனிவு, தங்கு தடையில்லாத அருவி நடை, உள்ளத்தை அள்ளும் நவரஸவுணர்ச்சி, விறுவிறுப்பான கதைப் போக்கு! — இவை ராஸீனுக்குத் தனிப் பெருமை தந்தன.

---

4. ராஸீன் குடும்பம்

ராஸீன் குடும்பம் செல்வச் செழிப்புள்ளது. அது, வில்வா ஜில்லாவிலுள்ள ஃபெர்தே மிலான் என்ற கிராமத்தில் பரம்பரையாகத் தழைத்து வந்தது. குடும்பத்திற்கு விருது உண்டு; அதில் ஒரு எலியும் ஒரு அன்னமும் எழுதப்பட்டிருந்தன. ஃபிரெஞ்சில் எலிக்கு ரா, அன்னத்திற்கு ஸீஞ் அல்லது ஸீன் என்று பெயர். ரா + ஸீன் = ராஸீன்: ராஸீன் என்பது குலப் பெயர். மகாகவி ராஸீனின் தந்தையார் அரசாங்க உப்பிலாகாவில் வேலை பார்த்தார். அவர் இரக்கமும் ஒழுக்கமும் உடையவர். அவர் மனைவி கற்பும் கருணையும் கொண்ட அன்புச் செல்வி. அவர்கள்

செய்த புண்ணியப் பயனே ழேன் ராஸீனுகப் பழுத்தது!

---

5. அநாதை

ழேன் ராஸீன் 60 ஆண்டுகள் வாழ்ந்தான். பிறக்கும் போதே, துயரமும் அவனைத் தொடர்ந்தது: பதிமூன்று மாதக் குழந்தையா யிருக்கும்போதே, ராஸீன் தாயை இழந்தான்; மூன்று வயதில் தந்தையை இழந்தான். இந்த அநாதைக் குழந்தையைத் தந்தைவழிப் பாட்டனர் எடுத்துவளர்த்தார். தாயின் அன்பும், தந்தையின் பாதுகாப்பும் இல்லாத குழந்தையின் துயரைப் பட்டவரே அறிவர். ஆனல், ராஸீன் கவலைச் சுமையைக் கலைச் சுவையில் கரைத்தான்; கடவுளன்பில் மறந்தான். கற்றுக் கேட்டுச் சிந்திப்பதில், அவன் சுறு சுறுப்பா யிருந்தான்.

---

6. போர்து ராயல்

பத்துவயதில், ராஸீன் போவே (Beauvais) கல்லூரியில் சேர்ந்து படித்தான்; பரிசுகள் பெற்றுத் தேறினன்; 16-ஆம் வயதில் புகழ் பெற்ற * போர்து ராயல் (Port Royal) என்னும்

---

* ஃபிரெஞ்சில் Port Royal என்பதை போர் ர்வாயால் என்று உச்சரிப்பர்.

திருமடத்தில் சேர்ந்து கலை வளர்த்தான். ராஸீனுடைய பாட்டனரும், இரண்டு அத்தைகளும் அங்கே வசித்தனர்; அவனைக் கவனித்தனர்.

போர்து ராயல், நிம்மதியான திருமடம்; தோட்டமும் துரவும் சூழ்ந்த அழகு வனம். அங்கே பிரமசரிய விரதம்பூண்ட துறவிகள் பலரும் கன்னிகைகள் பலரும் தனித்தனியே வசித்தனர். அவர்கள் *ஜான்ஸனிகள். அக்காலம் ஜான்ஸன் என்பவர் ஒரு தனி மதம் ஏற்படுத்தினர்; அதுவும் கிறிஸ்து மதமே; ஆனல், கத்தோலிகத்திலிருந்து வேறுபட்டது: 'மனிதன் சிற்றறிவினன்; அவன் மனம் ஆபாசக் காடு; இறைவன் அருளின்றி மனிதன் செயலற்றவன்; திக்கற்றவன்; அவன் அருளே தாரகமாகத்தான் அவன் உய்யமுடியும். மனத்தை நம்பி, மனிதன் ஈடேறமுடியாது. இறைவனையே எப்போதும் நம்பி, நாடி, போற்றிப் பணிந்து, தியானித்துத் தொழுது, அவன் கருணையால் மனிதன் ஈடேறவேண்டும்' என்பது ஜான்ஸனீயக் கொள்கையாகும். அதைப் பயிற்றவே போர்து ராயல் எழுந்தது. அதில் சேர்ந்த ஆணும் பெண்ணும் வைராகிகள்; தனிமையே அவர்களுக்கு இனிமை; கல்வியே செல்வம்; பக்தி ஸாதனமே முக்தி ஸாதனம்.

* ஃபிரெஞ்சில் ழூான்ஸனித் என்பர்.

இம் மடத்தில் அரிய அறிவாளர் வசித்த னர் : லூயி XIV முதலில் இம்மடத்தை ஆதரித் தான். ஜெஸுட் பாதிரிகளுக்கு ஜான்ஸனீயம் பிடிக்கவில்லை; எதிர்த்தனர். பாஸ்கல் என் னும் புலவன் ஜான்ஸனீயத்திற்கு ஆவேச மான மறுப்புகள் தீட்டிவிட்டான். பிறகு, லூயி மன்னனே எதிர் செய்தான் : போர்து ராயல் தரை மட்டமானது; ஃபிரான்ஸில் அதன் கொள்கைக்கு இடமில்லாது போயிற்று.

ராஸீன் காலத்தில் போர்து ராயல் உச்ச நிலையில் இருந்தது.

---

7. கலைப் பால்

அந்த இடமும், மடமுமே அவனுக்கு அமைதியும், ஆறுதலும் அளித்தன. போர்து ராயலைப்பற்றி ராஸீனே ஒரு நூல் எழுதியிருக் கிறான்; அதில் தன் அறிவை வளர்த்த பேரா சிரியர்களுக்கு நன்றி செலுத்தி யிருக்கிறான். அவர்களுள் முதன்மையான இருவர், நிகோல் (Nicole), லான்ஸலோ (Lancelot) ஆவர். நிகோல் இலத்தீன் புலவர் ; ராஸீனுக்கு இலத்தீன் இலக் கியத்தில் புலமை உண்டாக்கினவர். லான் ஸலோ பெரிய கிரேக்கப் புலவர்; மிகவும் அன்புடன் ராஸீனுக்கு கிரீக் இலக்கியச் சுவை யேற்றினவர். ஹோமர், ஸொஃபோக்ளிஸ், யூரிபேது, அரித்தோதிலன், பிளாதன் (Homer,

Sophocles, Euripides, Aristotle, Plato) முதலிய புலவர் இலக்கியங்களைக் கரைத்துக் குடித்துக் கலை வளர்த்தான் இளம் ராஸீன். சிறந்த கிரேக்கக் கவிகளைப் பாடம் பண்ணி ஒப்பிப் பதில் அவன் மகிழ்ச்சி கொண்டான்.

ராஸீனை ஆக்கியவர் ஸொஃபோக்ளிஸ், யூரிபேது ஆகிய இருவரே என்பது புலவர் பாலுவின் அபிப்பிராயம். ஸொஃபோக்ளிஸிடம் ராஸீன் நாடகக் கதைகள் பெற்ருன்; யூரிபேதிடம் நடையும் நயமும் நடிப்பும் பெற்ருன். போர்து ராயலில் நாடகமோ, தமாஷோ ஒன்றுமில்லை; அது துறவிக்கூடம். ஆதலால், ராஸீனுடைய நாடகப் புலமை இயல்பாக அவனுடன் பிறந்ததே! போர்து ராயலின் பரிசுத்த வாழ்க்கை அவனுக்கு அறிவுத் தெளிவும், சிந்தனை சக்தியும், தெய்வ பக்தியுடன் கலைப் பாலும் புகட்டியது. அநாதையான ராஸீனுக்குப் போர்து ராயலே இறுதிமட்டும் தாயகமும், தாரகமும் ஆனது. அங்கேயே அவன் கவிமலர்ச்சியும் பெற்ருன்; பல அரிய கவிகள் புனைந்தான். 1658-ஆம் ஆண்டு, 19-ஆம் வயதில், ராஸீன் போர்து ராயல் படிப்பை முடித்து, பாரிஸ் ஹார்கோர்ட் கல்லூரியில் ஓராண்டு தருக்க நூல் பயின்ருன்.

---

8. வேலை

கல்லூரிப் பயிற்சி முடிந்த பிறகு, ராஸீன் பாரிஸில் தன் மாமன் நிகோலாசுடன் தங்கினான். இச்சமயம், அவனுக்குக் கலைவாணர் உறவு கிடைத்தது. ஆனால், பிழைப்பிற்கு? ஊஃஜே (Uzes) என்ற கிராமத்தில் மற்றொரு மாமன் (ஸ்கோனன்) மதகுருவாயிருந்தான். அவன் ராஸீனை அழைத்து, ஒரு வருஷம் மத வேலைக்குப் பழக்கினான்; மதக் கோயிலில் தகுந்த பதவி தருவதாகச் சொன்னான்; ஆனால், வானெட்டப் பறக்கும் கவியுள்ளத்திற்கு அந்த வேலை பிடிக்கவில்லை. எந்த வேலையிலும் கட்டுப்பட்டிருக்க ராஸீனுக்கு விருப்பமில்லை. அவன் வேலை தேடவுமில்லை; பணஞ் சேர்க்க விரும்பவுமில்லை. அவனுக்குச் சிறிது பிதிரார்ச்சித நிலம் இருந்தது; அதையும் தாயாதியொருவன் வழக்குத் தொடுத்துப் பறித்துக் கொண்டான். அந்த வழக்கின் விநோதத்தை "**வக்கீல்கள்**" என்ற நாடகத்தில், ராஸீன் நகை ததும்பக் கேலி செய்திருக்கிறான். உலகியல்பின் வக்கிர விநோதங்களை இப்படியே அவன் சொல்லோவியங்களாகத் தீட்டி, அரங்கேற்றி வந்தான். கலை, கலைவாணர் உறவு—இவ்விரண்டையே அவன் விரும்பினான்; நாடகக் கலையில் மனம் பறிகொடுத்தான்.

9. புலவர் உறவு

பாரிஸ், நாகரிகச் சந்தை; அருங்கலை நிலயம்; புலவர் விருந்தகம். பாரிஸ் உணவு விடுதிகளில் புலவர் கூடி, நாவிருந்துடன், செவிவிருந்தும் அருந்துவதுண்டு. அக்காலம் **மூதோம் ப்ளாங்** (வெள்ளாட்டுக் கிளப்பு), **போம் து பான்** (பைன் கனி கிளப்பு), **லோரேன் கிராஸ்** ஆகிய மூன்று விடுதிகள் பிரசித்தமா யிருந்தன. இவற்றில் புலவர் கூடி அளவளாவுவர். அவருள், * **மோலியர், பாலு, லாஃபோந்தேன், ராஸீன்** ஆகியோர் நால்வரும் முதன்மையானவர். இவர்கள் அடிக்கடி சந்தித்துக் கலைவிருந்துண்பார்கள்; அவரவர் பாடிய பாடல்களை அரங்கேற்றுவார்கள்.

லாஃபோந்தேன், சிறந்த கவி, மேதாவி; ஈஸாப் சிறுகதைகளை வெகு ரஸமான கவிகளாகப் புனைந்துள்ளார். அவர் கவிகளைப் படிக்காத மாணவரில்லை. ஆனல், ஆள் சுகபோகச் சோம்பேறி; அசாத்திய மறதி; உடம்பு வணங்காது; என்றாலும், சிறந்த கலைவாணர்! அரசர் அவரை விரும்பிச் சன்மானித்தார். லாஃபோந்தேன் ராஸீனுக்கு அடிக்கடி எழுதிவந்தார்.

---

* மோலியர் வரலாறு தனி நூலாக வெளிவரும்.

10. இரசிகர் பாலு

நிகோலாஸ் பாலு, பெரிய புலவர்; இனிய நண்பர்; அரசன் அன்பைப் பெற்றவர்; புலவர் நேசத்தை விரும்பும் இரசிகர்; நல்ல கவி; சிறந்த எழுத்தாளர்; சமயோபகாரி. அவர் வீடு, புலவர் விருந்தகமா யிருந்தது.

ராஸீன், சொற்செல்வன்; இளகிய கருணை மனத்தன்; உள்ளன்புச் செல்வன். "**அன்பின்றி யானில்லை**" என்பது அவன் சுருதி வாக்கு. பிறர் துயர் கண்டால், ராஸீன் மனங்கலங்கிக் கண்ணீர் வடிப்பான். ராஸீன் இரசிக சிகாமணி; நல்ல கவிகளை உச்சிமேல் வைத்துப் போற்றுவான்; பொறாமை யில்லாமல் ஆதரிப்பான். அவனும் **பா**லுவும் கவிக் கலையைப் பற்றி அடிக்கடி பேசுவர்.

பாலு பூரணமான கவிதையைத்தான் ஒப்புக் கொள்வார். அவர், "**கவிக் கலை**" (**L' Art Poetique—the Poetic art**) என்ற ஒரு பெரிய காவியம் எழுதியிருக்கிறார். அதில் உண்மையான கவியிலக்கணத்தைச் சொல்லி, தாம் அறிந்த ஃபிரெஞ்சுக் கவிகளைப்பற்றி யெல்லாம் விமரிஸனம் செய்திருக்கிறார்: "பாமர ஜனங்கள் கைதட்ட வேண்டுமென்று, நடைதெரியாமல், இலக்கண சுத்தமில்லாமல், கண்டபடி கவி பாடாதே. மற்ற வேலைகளில் சிற்றுளுக்கு இட

முண்டு; கவிதையிலோ முதல்தரமான புலவ னுக்கே இடமுண்டு! செங்கலடுக்கும் மேஸ்திரி வேலையன்று கவி புனைதல்; கவிக்கலை அபாய மானது; மிக்க கவனத்துடன் அதிற் புகவேண் டும். அழகு, உண்மை, ஆழ்ந்த அறிவு மூன்றும் கவிதையில் பொருந்த வேண்டும்'' என்கிறார் இரசிகர் பாலு. பாலு தொப்பி முதல் கட்டை விரல் வரையில் நேர்மையான கனவான். “வெறும் ஆடம்பரத் தோற்றத்தில் நான் மயங் குவதில்லை; உள்ளத்தைத் தொட்டுப் பார்த்தே ஒருவரை அறிவேன். பகட்டன்று; மனப் பான்மையே முதன்மை. உண்மைக் கனவான் நேர்மையாயிருக்க வேண்டும்; தீமையை அஞ்ச வேண்டும்; தரும நியாயத்தை மதிக்க வேண் டும்; அநீதியை விட்டு நீங்க வேண்டும். பிரபுவா யிருந்தாலும் சரி, அரசனா யிருந்தாலும் சரி, பரம்பரைச் செல்வனானாலும் சரி, நேர்மை தப்பி னால், கொடுமையாக நடந்தால், அவர்களை வெறும் ஆடம்பரப் பூச்சாண்டி என்றே நான் ஒதுக்குவேன். சிறுமை, பாசாங்கு, மோசம், போக்கிரித்தனம், பொய், கோள், வஞ்சம் கொண்ட மனிதன் மனிதனா?'' — என்கிறார் பாலு. பாலுவின் நண்பர் என்றாலே அன்பும் பண்பும் உள்ளவர்கள் என்றறியலாம்! “உண் மையே அழகு; உண்மையே விரும்பத் தக்கது. இயற்கையைக் கற்றறி; உள்ளத்தை ஆழ்ந் தறி; உலகைப் பார்த்தறி; பார்த்ததைச்

சிந்தி; மாசற்ற சொற்களால் உன் மனத்தை வெளியிடு; அதுவே அரிய இலக்கியமாகும்" என்கிறார் பாலு.

---

11. சன்மானம்

ராஸீனுக்கும் பாலுவுக்கும் கலையுறவுடன் கருத்துறவும் அதிகம். தூய கலையுள்ளங்கள் அன்புடன் சேர்ந்தால், அந்த இன்பமே இன்பம்! லாஃபோந்தேன் தேனொழுகும் சிறு கதைப் பாடல்கள் படிப்பார்; மோலியர் நாடகங்கள் படிப்பார்; பாலு கலைக் கவிகள் படிப்பார்; ராஸீன் உள்ளத்தை அள்ளும் செஞ்சொற் கவிவிருந் தளிப்பான். பாலு ராஸீன் கவிகளை மிகுதியாகப் போற்றிப் புகழ்வார். அதனால், அவன் கவித் திறமை மெல்ல மெல்ல அரசருக்கும் எட்டியது. அச்சமயம் அரசர் திருமணம் நடந்தது. அதைச் சிறப்பித்து, **ஸேன்நதி தேவதை (La Nymphe de la Seine)** என்ற ஓர் அரிய கவி புனைந்தான் ராஸீன். அரசரின் மதகுரு அக் கவியை மெச்சினார். அரசர் ராஸீனுக்கு 100 பொன் சன்மான மளித்தார்.

---

12. முதல் நாடகம்—"தெபைது"

அக்காலம் நாடகக் காவியங்களுக்கே பெருமதிப்பிருந்தது; அரங்கமே புகழ் நிலயமாயிருந்தது. ஆதலால், ராஸீன் 1664-ஆம்

ஆண்டு முதல், காவிய நாடகங்கள் எழுத முனைந்தான். மோலியர் அவனை ஊக்கினர். அப்போது, ராஸீனுக்கு வயது இருபத்து நான்கு.

ராஸீன் எழுதிய முதல் நாடகம் தெபைது **(Tebaide)** என்பது. இஃது, அரிய சோக நாடகம்; உலகியல்பைப் படம் பிடித்துக் காட்டுவது; மண்ணாசையாலும், பொருமையாலும், அகம்பாவத்தாலும் மனிதர் செய்யும் பாதகத்தை மயிர் சிலிர்க்க விளக்குவது:

தேப்ஸ் மன்னன் ஓதிபன் என்பவனுக்கு மைந்தரிருவர்—**எதியோகுலன், போலிநீஸ்.** தந்தைக்குப் பிறகு இருவரும் அரசாளப் போட்டி போடுகின்றனர். தாய் **ஜோகாஸ்தை** ஆளுக்கு ஓராண்டாக ஆளச் சொல்லுகிருள். மூத்தவன் எதியோகுலன் ஓராண்டு அரசு புரிந்ததும், அவனை மண்வெறி பிடித்துக் கொள்கிறது; தம்பிக்கு அரசு தர மறுக்கிருன். இருவருக்கும் கடும்பகை வளர்கிறது.

இவர்கள் மாமனுகிய **கிரியோன்,** வஞ்சக் கொடியன்; இருவருக்கும் பகை மூட்டிச் சிண்டு முடித்துவிட்டுக் கத்தி தீட்டச் செல்லுகிருன். கிரியோன் பிள்ளை **ஹேமன்;** போலிநீஸின் தங்கையை அவன் காதலித்தான். சகோதரரை ஒழித்து அவர் தங்கைக்குத் தன் மகனை மண முடித்து, அரியணை யேற்றி அரசைக் கைப்பற்றவே, மாமன் பலமான சூழ்ச்சி செய்தான். அண்ணனைத் தூண்டி,

"விடாதே; கொல்லு தம்பியை!" என்றான்; தம்பியைத் தூண்டி, "அண்ணன் பொல்லாதவன்; தீட்டு கத்தியை!" என்றான். தாய் எவ்வளவோ அழுது கெஞ்சிச் சமாதானம் சொன்னாள்; பலிக்கவில்லை. இருவரும் படை திரட்டிப் போர் புரியக் கிளம்பினர். அப்போது "இருவருக்காக, இத்தனை வீரர் உயிர் தருவானேன்? போட்டி உங்களுக்குள்ளன்றோ; இருவரும் போடுங்கள் சண்டை; வென்றவர் ஆளட்டும்" என்றனர் அறிஞர். தாய், "இருவரும் சந்தித்துச் சமாதானம் பேசுங்கள்!" என்றாள். அப்படியே இருவரும் சந்திக்கின்றனர். மாமன் இருவர் பகையையும் தீட்டி விடுகிறான். பகைத் தீ குமுறுகிறது. அதைக்கண்ட தாய் தற்கொலை புரிந்து கொள்கிறாள். சகோதரர் இருவரும் வாய் வீச்சை விட்டு, வாள் வீச்சிற் கிளம்பி மாள்கின்றனர். இவர்களைத் தடுக்க வந்த ஹேமன் குத்துப்பட்டு வீழ்கிறான். அவன் காதலியும் மனமுடைந்து சாகிறாள். கனவு வீணானது! இக் கொலையைத் தூண்டி விட்ட மாமனும் தன் வஞ்ச நெஞ்சை வாளாற் பிளந்து கொண்டு மாள்கிறான். மண்வெறி ஒரு வம்சத்தையே பலி வாங்கிவிட்டது.

இக் கதை மோலியர் விருப்பப்படி எழுதப் பெற்றது; 20—6—1664-ல் அரசர் மாளிகையில் அரங்கேறிப் புகழ் பெற்றது.

---

13. நாடகங்கள்

அன்றுமுதல் ராஸீன் நாடகத்திற்குக் கொண்டாட்டந்தான்! நாடகக் கலையில் ராஸீன் முழுக் கருத்தும் செலுத்தினன்; கிரேக்க இலக்கியத்திற்கு **யூரிபேது** (**Euripides**) செய்ததை, ஃபிரெஞ்சு இலக்கியத்திற்குத் தான் செய்ய நினைத்தான்; "**அலெக்சாந்தர்**" என்னும் அரிய சரித்திர நாடகம் எழுதினன்:

அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்துப் **போரஸ்** என்னும் புருஷோத்தமனுடன் போர் செய்தான். இச் சம்பவத்தில் ஒரு காதற் படலத்தைப் புகுத்தி அற்புதமான நாடகம் எழுதினன் ராஸீன். பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவைப்பற்றி ஐரோப்பியர் என்ன எண்ணினர் என்று இந்நாடகம் விளக்குகிறது; இந்நாடகக் கதை இந்நூலின் பிற்பகுதியில் தனியே வருகிறது. 'அலெக்சாந்தர்' நாடகத்தை அரங்கேற்ற, மோலியர் நாடக சபையில் போதிய வசதியில்லை. ராஸீன் தனக்கென அரங்கோ, நடிகரோ இன்னும் அமைத்துக் கொள்ளவில்லை. மோலியர் அரங்கம், நகைச்சுவை நாடகங்களுக்கே ஏற்றது. சோக நாடகங்களுக்குத் தக்க பாத்திரங்கள் அவரிடமில்லை. தகுந்தவரைத் தயாரிப்பதாக மோலியர் வாக்களித்தார். எனினும், அவருடைய எதிரிகள் ராஸீனே

வசப்படுத்தித் தமது நடன சபையில் 'அலெக் சாந்த'ரை அரங்கேற்றினர். மோலியருக்கு, இது சிறிது வருத்தமா யிருந்தது; எனினும், கௌரவமாக விலகி நின்ருர்.

---

14. அந்த்ரோமாக்

ராஸீன் எழுதிய மூன்ருவது நாடகம் **அந்த்ரோமாக் (1667).** அதுவே ராஸீனுடைய கலைத் திறமையை விளக்கியது. அந்நாடகக் கதையின் சுருக்கத்தைத் தருகிறேன் :

திராய்ப்போரில் இரண்டு வீரமணிகள் புகழ் சிறந்தனர்—**ஹெக்தர், அச்சிலெஸ்.** இருவருக்கும் நடந்த போரைப்பற்றி **ஹோமர்** தனது இலியாதில் வீராவேசமாகப் பாடியிருக்கிருன். அச்சிலெஸ் ஹெக்தரைப் போரில் வீழ்த்திக் கொன்று, அவன் மனைவி **அந்த்ரோமாக்கை**யும், மகன் **அஸ்தினுக்ஸை**யும் சிறைப் பிடித்துத் தன் மகன் **பைரஸ் (Pyrrhus)** வசம் ஒப்புவிக்கிருன். அச்சிலெஸுக்குப் பிறகு, பைரஸ் எபிர் **(Epire)** நாட்டிற்கு அரசனுகிருன்.

திராய்ப்போருக்கே காரணமா யிருந்தவள் **ஹெலன்.** அவள் கணவன் மெனலஸ் தன் மகள் **ஹெர்மாயினை**ப் பைரஸுக்குத் தருவதாக முன்பே தீர்மானித்திருந்தான். ஆனல், ஹெர்மாயின் அகமெம்னன் மகன் **ஓரெஸ்தை**க் **(Oreste)**

காதலிக்கிருள். பைரஸோ ஹெக்தரின் விதவையான அந்த்ரோமாக்கிடம் மனதைப் பறிகொடுக்கிருன். அந்த்ரோமாக் உள்ளத்தைத் தனது கணவன் ஹெக்தருக்கே அளித்த கற்பரசி. அவள் மகன் அஸ்தினக்ஸைக் கிரேக்கர் தம்மிடம் கைதியாக ஒப்புவிக்க வேண்டினர். "கவனம்! மகன் வேண்டுமானல், மனத்தை எனக்குத் தா; என் அரசியாயிரு!'' என்று பைரஸ் கெஞ்சினன். "மகன, மானமா?'' என்று அவள் தன் மனச்சாட்சியைக் கேட்டாள்; "மகனுக்காக இணங்குவது, மானத்திற்காக இறப்பது'' என்று தீர்மானித்தாள். பைரஸ் அவளை உயிர் போல நேசிக்கிருன்.

இதற்குள் ஹெர்மாயின் ஓரெஸ்தைத் தூண்டி, பைரஸைக் கொல்லச் சொன்னுள். காதலும் பொருமையும் கலந்தால் கேட்பானேன்! அவன் அப்படியே பைரஸைக் கொல்கிருன். பைரஸ் தன் மகுடத்தை அந்த்ரோமாக்கிற்குச் சூட்டி இறக்கிருன். ஓரெஸ்த் ஓடி வந்து "காதலீ, பைரஸைக் கொன்று விட்டேன்!'' என்று ஆரவாரிக்கிருன். பெண் மனம் மாறுகிறது. "அட பாவி, என்ன காரியம் செய்தாய்! இந்த நாட்டிற்கே பெருமைதந்த அந்த வீரனையோ கொன்ருய்? துரோகி! தூ, என் முன் நிற்காதே!'' என்கிருள். "நீ தானே கொல்லச் சொன்னய்?'' என்று ஓரெஸ்து

சினக்கிறான். "நானா? அட கொலைகாரா? என் மேலா பழியைப் போடுகிறாய்? உன் முகத்தில் விழிக்க மாட்டேன், போ!" என்று ஹெர்மாயின் சொல்மாறிச் சினக்கிறாள்; வெறி பிடித்தவள் போல ஓடி, வாளால் குத்திக் கொண்டு பைரஸ்பிணத்தின்மேல் விழுந்து சாகிறாள். அவளைத் துரத்திவந்து, காதலி குத்துண்டு கிடப்பதைக் கண்ட ஓரஸ்திற்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. ஒரு நண்பன் அவனை இழுத்துச் செல்லுகிறான்.

பொதுஜனங்களின் அன்பைப் பெற்று, அந்த்ரோமாக் நாட்டை ஆளுகிறாள்.

1667-1677: இப் பத்தாண்டுகள் ராஸீன் அற்புதமான சோக நாடகங்கள் எழுதி அரங்கேற்றினான். என்றாலும், இன்னும் அவன் புகழ் குடத்துள் விளக்காகவே யிருந்தது. பாரிஸ் அரண்மனை மன்றத்தில் நாடகம் பார்க்க வரும் சிலருக்கே ராஸீனைத் தெரியும். பாலு ஒருவருக்கே அவன் மேதை நன்றாகத் தெரியும்; அவரே அரசருக்குச் சிபார்சு செய்து அவனுடைய நாடகங்களை அரங்கேற்றிவந்தார். மற்றப்படி, ராஸீன் எப் புகழும் தேடவில்லை; கலையைக் காசாக்கவும் கருதவில்லை.

15. பொறாமைத் தீ

ஆனால், மனிதவியல்பில் பொறாமை ஒன்றிருக்கிறதே! யாராவது முன்னுக்கு வந்தால் அடுத்தவன் வயிற்றில் இந்தப் பொறாமைத் தீ பற்றுவது வழக்கம்: 'நாம் எவர் வம்புக்கும் போகாமல் சாதுவாக, அடக்கமாக, நம்மால் இயன்ற நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறோம்; எவருக்கும் தீங்கு நினைப்பதில்லை.' என்றாலும், பொறாமைப் புல்லரின் தீ விழி சும்மா இராது! 'அடே, இந்த ராஸீன், இவ்வளவு உயர்ந்த நாடகம் புதிய முறையில் எழுதுவதா! அரங்கேற்றுவதா! அதுவும் அரசர் மாளிகையில்! இவனையும் புலவர் மெச்சுவதா....ஹா!' என்று, சிலர் பொறாமை 'குப்' பென்றெழுந்தது. அடுத்தபடி என்ன? எந்தப் புலவர் மெச்சினாலென்ன? அப்பழுக்கற்ற அருள்வாக்காயிருந்தாலென்ன? அதில் நுழைந்து, துருவிக் குற்றங் கண்டுபிடிக்க வேண்டியது; குற்றத்தைப் பூதக் கண்ணாடி வைத்துப் பெரிதாகக் காட்ட வேண்டியது; 'இப்படிப்பட்டவன் நாடகம் எழுத வந்து விட்டானே!' என்று தூற்ற வேண்டியது; அவன் மண்டையை உருட்ட வேண்டியது! இதே தொழிலாகக் காமாலைக் கண்ணர் சிலர் கிளம்பினர். காமாலைக் கண்ணருக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்—மல்லிகையும் மஞ்சள்; சூரியனும் மஞ்சள்! இவர்க

ளுக்குத் தூபம் போட மற்றொரு நாடகசபை சேர்ந்தது !

---

16. கொர்நெல்

அதேகாலம், ஃபிரான்ஸில் பெரிய நாடகப் புலவரொருவர் புகழோங்கினர்— * **பியேர் கொர்நெல் (Pierre Cornelle)**; அவரே ஃபிரெஞ்சில், சோக நாடகத் தந்தை. அவர் ராஸீனை விட 33-வயது மூத்தவர்; வக்கீல்; இலத்தீனில் பெரும் புலவர்; வீரக் கனல் பறக்கும் எழுத்தாளர்; ஆவேசக் கவி; கலைவளர்த்த பிரெஞ்சு மந்திரி **ரிஷெலுவின்** ஆதரவில் அற்புதமான சோக நாடகங்கள் எழுதி, நடத்திப் பொது ஜனங்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்; அடக்கமானவர்; யாருடனும் அதிகம் பேசார்; எளியர்; சன்மார்க்கி. ராஸீன் நாடகங்கள் எழுதும்போது, அவர் 60-வயதுக் கிழவர்; பழுத்த பழம்; மனத்தைக் கடவுளிடம் வைத்து மதசம்பந்தமான கீதம் பாடிக் காலங் கழித்தார். அப்போதே, இளம் ராஸீன் சோக நாடகங்கள் எழுதி அரங்கேற்றினான்.

கொர்நெல்லை வியந்த **மாதாம் ஸெவிஞை (M. Sevingne)** என்னும் அறிஞை, ராஸீன் நாடகத்தில் உள்ள ஓட்டம், உணர்ச்சி, அழகு, சொற்சுவை ஆகியவற்றையும் புகழ்ந்தார். இம்

---

* கொர்நெல் நாடகக் கதைகள் தனி நூலாக வெளிவரும்.

மாது, அக்கால எழுத்தாளரில் ஒருவர்; இவர், தம் மகளுக்கு எழுதிய கடிதங்கள் பிரெஞ்சிலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. ராஸீன் நாடகத்தில் வரும் காதற்சுவை அமைப்பிற்கு, இம் மாது நல்ல யோசனைகள் சொன்னர். ராஸீன் நாடகங்கள் வெற்றி பெற்றமைக்குக் காரணம் ஷாமேலே (Champmesle) என்ற இரஸிகையே. அவள் அந்த நூற்ருண்டின் நாடக அரசி: சோகரஸம் நடிப்பதில் அவள் இணையற்றவள். ஷேக்ஸ்பியருக்கு டேவிட் காரிக் (David Garrick) வாய்த்ததுபோல ராஸீனுக்கு ஷாமேலே வாய்த்தாள்; அவளால், அவன் நாடகங்கள் மாயின.

பொருமைக் கோட்டான்கள் இதையெல்லாம் எப்படிப் பொறுப்பர்? தனியே கூடி, ராஸீன் நாடகங்களைத் துருவித் துருவிப் பார்த்து, அவற்றில் துருப் பிடித்த சரக்குகள் எவையேனும் இருக்கின்றனவா என்று இவர்கள் ஆராய்ந்து, சதியாலோசனை செய்தனர்; ஒரு பெரிய கிளர்ச்சி செய்யச் சரியான சமயமும் பார்த்திருந்தனர். கொர்நெல் தாஸருக்கு ராஸீனின் புதிய நாடகங்கள் பிடிக்கவில்லை.

---

17. பகைப் புயல்

1677-ஆம் ஆண்டு, ராஸீன் ஓர் அற்புதமான காதல் நாடகம் எழுதினன்: பெயர் பேதுரி

(Phedre); கதை யூரிபேதிடம் எடுத்ததே. அதில் புதியகற்பனைகள் சேர்த்து, ராஸீன் அழகுபடுத்தினன். இது, சித்திராங்கி கதை போன்றது; கிரீக்கு, இலத்தீன் - இருமொழிகளிலும் நாடகமாய் ஆக்கப் பெற்றுள்ளது. எனினும், ராஸீன் நாடகமே உயர்ந்தது. இந்நாடகக் கதையை ராஸீன் நடையிலேயே எழுதி இந்நூலின் பிற்பகுதியில் சேர்த்திருக்கிறோம்.

காதலின் கடுமையை விளக்குவதில் இந்த நாடகம் முதன்மை பெற்றது. நாடகம் பூர்கோஞ் ஓட்டலில் நடந்தது. இந்த நாடகத்தில் ஷாமேலே பேதுரியாக வெகு திறமையுடன் நடித்தாள். விட்டார்களா எதிரிகள்? நாடகத்தைக் கேலி செய்தனர்; நடையை 'நையாண்டி' செய்தனர்; 'இதைப் பார்ப்பதே கெடுதல், மோசம்' என்று ஜனங்களைக் கலைத்தனர். அவ்வளவு தானோ?

ப்ராதோன் (Pradon) என்ற போட்டிக் கவி ஒருவன் கிளம்பினன்; "ராஸீன் என்ன கவி? நான் எழுதுகிறேன் பாருங்கள், நாடகக் கவி!" என்று வீரூப்புப் பேசினன். ராஸீனுடைய 'பேதுரி' நாடகத்தை வைத்துக் கொண்டான்; அதில் 'அணி' என்றிருந்தால் இவன் 'மணி' என்று திருத்திக் கொண்டு, அங்கு மிங்கும் சொற்களைத் திருடி, மாற்றித் திரித்து, குலைத்துக் கலைத்து, காட்சிகளை இப்

படியும் அப்படியும் புரட்டிப் போட்டு, தானும் ‘பேதுரி’ என்ற நாடகம் எழுதி, “பார் நாடகத்தை.....டும்.....டும்.....டும்.....டும்! வாருங்கள், வந்து பாருங்கள், களி கூறுங்கள், ஆசி தாருங்கள்!” என்றெல்லாம் தண்டோராப் போட்டான்! ஏக விளம்பரம், அமளி, அமர்க்களம்! கொனெகாட் (Guenegaud) ஒட்டலில் திரை கட்டி, ஆட்களைத் தயாரித்து, தடபுடலாக நாடகம் போட்டான் போலிக் கவி! கொர்நெல் தாஸரும் சேர்ந்து தூபம் போட்டுவிட்டனர்: “ராஸீன் நாடகம் ரஸமில்லை; ரஸாபாசம்; வந்து பாருங்கள் எங்கள் ‘பேதுரி’யை! மொழிக்கு மொழி இனிக்கும்! காட்சிக்குக் காட்சி இன்பஞ் சிலிர்க்கும்!” என்று மார்தட்டிச் சத்தம் போட்டுப் பொது ஜனங்களை வளைத்துக் கொண்டு வந்து, கூட்டம் போட்டனர். சாரமில்லாத சொத்தை மொழிபெயர்ப்புகளையும், கலைச் சுவையேயில்லாத சொல்லடுக்குகளையுங் கூடச் சத்தம் போட்டுச் சந்தையில் தள்ளிவிடும் ஆட்கள், எந்தக் காலத்திலும் உண்டு! கலைக்கே உயிர்த்து, நாளெல்லாம் கை ஒடிய ஒடிய எழுதிப் பாடு படும் உண்மைக் கவிகளுக்கு எக்காலத்திலும் இப்படிப்பட்ட சோதனைகளும் உண்டு!

மஹாகவி ராஸீனுக்கும் சோதனை வந்தது: எதிரிகள் செய்த தடபுடல் பிரசாரத்தில் ஜனங்

கள் மயங்கிப் போனர்கள்; போலி நாடகத்திற்கு ஆள் பிடித்து வந்து, ஏகக் கும்பல் சேர்த்தனர்; ராஸீன், கொட்டகைப் பக்கம் போனல்கூடக் கல்லெறிதான்! பாவம்! ராஸீன், உண்மையான புலவன்; கவிக்கலையில் கரைகண்ட வித்துவான்; நாடகக் கலையில் ஒப்பற்ற சிருஷ்டிக் கவி! அவன் கைப்பணத்தைச் செலவிட்டுக் காட்சி ஜோடித்து, நடிகரைத் தயாரித்து, இனிய இசைவிருந்தளித்து, 'வாருங்கள்!' என்றழைத்தான். யாரும் அவனை மதிக்கவில்லை; அவன் கொட்டகைக்குக் காக்கைக் குஞ்சுகூடப் போகவில்லை. தினம் பெருஞ் செலவு செய்து, ஆட்டந் தொடங்குவான்; கூட்டம் வராது! பணம் நஷ்டம்—ஆயிரக் கணக்கில் நஷ்டம்!

போலி நாடகத்திற்கோ, பணம்வந்து குவிந்தது! அங்கே பெண் குரல்; ரவை கொட்டி, 'தை-தா-தக்க-தகட' என்று மேடை இரண்டாகும்போது, ராஸீனின் கலைச் சுவையை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஆனல், ராஸீன் சும்மா விடவில்லை; எதிரிகளின் ஊழல்களை உரிமையுடன், சுயமரியாதையுடன் கண்டித்தான். இருபுறமும் வார்த்தை தடித்தது. எதிரிகள் பேச்சுடன் நிற்கவில்லை; ராஸீனை 'நையாண்டி' செய்து, வசை பாடி, இனிய குரலுள்ள வேசைகளைக் கொண்டு அந்தப் பாடல்களை அரங்கேற்றி, சபை சிரித்

துக் கைதட்டச் செய்தனர். பாலு ஒருவரே, எதிரிகள் செய்யும் அக்கிரமங்களைக் கண்டித்தார். 'அப்படியா செய்தி?' என்று ஒரு செல்வப் பகைவன் தடியைத் தூக்கினான். ராஸீனுக்கும் பாலுவுக்கும் தடியடி கொடுத்ததாக, இரண்டு வரி சேர்த்துப் பகைவர் பாடி ஆடிக் குதித்தனர்; கொக்கரித்தனர்! நல்ல இரசிகரான கோந்தே பிரபு ராஸீனுக்குச் சிறிது பாதுகாப்பாயிருந்தார். பொறாமைப் புல்லர் இரண்டு மூன்று மாதம் கூத்தாடிக் கொட்டமடித்து, மெல்ல மெல்ல அடங்கினர். போலி நாடகம் பத்தொன்பது தடவை அமளியாக நடந்தது; பிறகு, அஃது இருந்த இடமே தெரியாமல் போனது! போலிக் கவியும் மறைந்தான்.

---

18. மனம் ஒடிந்தது

பொறாமையால் அலட்சியஞ் செய்து, போட்டிக்காகவே போலிக் கவிகளைக் கொண்டாடி, மேடைமேல் தொண்டை கிழியப்பெறும் போலி இரசிகர் ஜம்பம் எத்தனை நாள் பலிக்கும்?

'இது பதர்; இது மணி' என்று அறிஞர் பகுத்தறிந்தனர். ராஸீன் நாடகத்தையே இரசிகர் ஒப்பினர். இருந்தாலும், பொறாமைப் பித்தர் செய்த கொடுமைகளால் ராஸீன் மனம் ஒடிந்து போனது. பாலு அவரைத் தேற்றி

ஒரு கவி புனைந்தார்; "பகைவர் பயன்" என்பது அக்கவியின் பெயர். அதில் அவர் சொல்லியது எக்காலத்திற்கும் பொருந்தும்; அதன் சாரத்தைக் கீழே தருகிறேன்:

"நண்பா, உண்மைக் கவிகளை உலகம் எளிதில் அறியாது; போலிக் கவிகளின் தடபுடலே அதிகமாயிருக்கும். நான் எத்தனையோ போலிகளைப் பார்த்திருக்கிறேன். பொறாமைப் போட்டிகள் எத்தனையோ வந்தன; நான் என்ன செய்தேனோ, நீயும் அதைச் செய்! உயர்ந்த கவிச்சுவை தெரியாத போலிப் பதர்கள் போட்டி போட்டுப் பகைத்து இழித்துக் காலிக் கூப்பாடு போடும்போது, அவர்களுடைய சிறு மதியைக் கண்டு சிரி, சிரி! இந்தப் பகைவர் பகையிலும் ஒரு பயனைக் காண்! இந்த மடக் கூப்பாடுகளெல்லாம் வீண், வீண்! இவர்களால் உண்மைக் கவியின் ஒளியை இருளாக்க முடியாது!

* * *

நண்பா, உனது கவிதை ஃபிரெஞ்சிலக்கியத்தில் புதிய வொளி வீசியிருக்கிறது! இன்று உன்னைப் பகைத்தவர் மறைவர். வருங் காலம் உனக்கே புகழ்முடி சூட்டும்; இஃது உறுதி. இன்றைய உலகம் உன்னை வைதாலும், நாளையுலகம் உன் வாக்கை வாழ்த்தும்! இவர்கள் இவ்வளவு இழிவாகப் பேசிய

இதே பேதுரி நாடகமே உனது சிரோமணி! இதை உலகம் உச்சிமேல் வைத்துக் கொண்டாடும். உனது கவித் திறமையை உலகெலாம் 'அற்புதம், அற்புதம்' என்று போற்றும்! நண்பா, தளராதே! தைரியமாயிரு!"—

இந்த ஒரு குரலே கவிக்கு ஆறுதல் அளித்தது; சுற்றிலும், ஏமாற்ற - இருள் அடர்ந்திருந்தது.

பாலு எவ்வளவு சொல்லியும், ராஸீன் மனம் தெளியவில்லை : "ஆ, நான் அருமையாக நேசித்த என்னவர்! என் தாய்மொழியில் இவர்களுக்குக் கலைமாளிகை கட்டினேன்; இரவும் பகலும் உடம்பைக்கூடப் பாராமல் இவர்களுக்காக இலக்கியத் தொண்டு செய்தேன்! ஒரு நன்றியும் இல்லையே! ஆ, எத்தனை வசவு! எவ்வளவு கேலி! என் மனம் ஒடிந்தது. போதும் நாடகம்; போதும் கவிதை; போதும் என்னவருக்குக் கலைத் தொண்டு செய்தது; போதும் சன்மானம்! இனி, இவர்கள் பக்கந் திரும்பிப் பாராமல், தனியே காலங் கழிக்கிறேன்!" என்று ராஸீன் அடியெடுத்து வைத்தான்.

போகுமுன், பேதுரி நாடகத்திற்கு ஒரு முன்னுரை தீட்டினன் :

"1—1—1677 : பூர்கோஞ் ஒட்டலில், ஷாமேலே கதாநாயகியாக நடிக்க, 'பேதுரி' அமோகமாக நடந்தது. கொர்நெல் ஆட்களும், சில கற்றுக்குட்டிகளும் சேர்ந்து 'சல்லி' செய்து, போலி நாடகம் எழுதிப் போட்டி போட்டுச் சதி செய்து, நாடகத்தைக் கெடுத்தனர்; என்னைத் தடியால் அடித்து, அவமானப் படுத்தியதாகப் பாட்டுப் பாடிக் கேலி செய்தனர். போலிகள் கூத்தெல்லாம் மூன்று மாதமே; பிறகு, போலி நாடகம் மறைந்தது. இவ்வளவு இடர்ப் பட்ட இந்த நாடகமே, எனது நாடக மணியாக விளங்கப் போகிறது! நான் அதில், மனித குணங்களை இயல்பாக வருணித்திருக்கிறேன். இக்காலம் இல்லாவிட்டாலும், வருங்காலமாவது எனது நாடகத்தை அறிந்து போற்றும் என்பது உறுதி!"

இதே நாடகத்தை அவனுடைய தலைமை ஆசிரியர் ஆர்நால்டு படித்து, "எவ்வித ஆபாசமும் இல்லை; வாக்கு மிக்க கம்பீரமாயிருக்கிறது" என்று மெச்சினர்!

போர்து ராயல் ஆசிரியர்களுக்கும், ராஸீனுக்கும் நாடக விஷயத்தில் சிறிது மனத்தாங்கல் இருந்தது. பாலு புகுந்து, சமாதானம் செய்துவைத்தார்.

19. இல்லறம்

உலகம் புளித்தது: இனி, போர்து ராயல் அமைதியிலேயே அடங்கித் துறவியாக வாழ்வ தென்றே ராஸீன் சென்றான். போர்து ராயல் அவனை வரவேற்றது. ராஸீன் கட்டுகளை வெட்டி யெறிந்து, உலகிலிருந்து விலகி, முனி வாழ்வு வாழ முனைந்தான். ஆனால், அவனுடைய ஆசிரியர், "ராஸீன், தனித்துறவின் கடுமையை உன் கலையுள்ளம் தாங்காது; துறவு கடினம்; ஆசையாணவங்களை அடக்கியாளுவது எளி தன்று; நீ, ஒரு நல்லாளைத் திருமணம் புரிந்து, இல்லறம் நடத்து!" என்றார்.

ராஸீனுக்கேற்ற இல்லாள் வாய்த்தாள்: 1—6—1677-ல் ராஸீன் காதரைன் என்ற அநா தைப் பெண்ணை மணந்தான்: தங்கமான பெண்; பரம சாது; கணவன் கிழித்த கோட் டைத் தாண்டவே மாட்டாள்; பத்தினி, உத் தமி; கொஞ்சம் பொருள் வசதியு முடையவள். ஆனால், அவளுக்குக் கலை கிலை தெரியாது; இலக்கியச் சுவை கிடையாது; பாட்டில் நாட்ட மில்லை; தன் கணவன் நாடகங்களின் பெயர் தான் அறிவாள்; ஒரு வரிபடித்ததில்லை. ஆனால், அவள் அன்பே ஒரு தனிக்கலை! அது, ராஸீனை மிக மகிழ்வித்தது! காதலரிருவரும் கருத் தொன்றி ஆதரவுடன் வாழ்ந்தனர். இருவருக் கும் ஏழு குழந்தைகள் பிறந்தன - ஐந்து பெண்,

இரண்டு ஆண். மூத்த பெண் மட்டும் மணம் புரிந்தாள்; மற்றப் பெண்கள் கன்னி மடத்தில் சேர்ந்தனர்; மூத்த பையனும் பிரமசாரியாகவே இருந்தான்; இளையவன், **லூயி ராஸீன்**, தகப்பனுரைப் போலக் கவியானுன்; அவன் கவி மட்டந்தான்; இருந்தாலும், கவியின் பிள்ளையும் கவியானது தந்தைக்கு ஒரு பெருமைதான்!

ராஸீன், நல்ல தந்தை; பிள்ளைகளிடம் மிக்க அன்புள்ளவன்; அவர்களுக்கு உயர்ந்த கல்வி யளித்ததுடன், அவர்களுடைய பேச்சு, நடை யுடை பாவனைகளையும் சீர்திருத்தி அமைத்தவன்:

"மகனே, **தேப்ரோ** (**பாலு**) போன்ற பெரியோர்களை மிகவும் மதித்து நட; வணக்கமா யிரு! அவர் வரம்பெற்ற மேதாவி; ஆளை அரை நொடியில் அறிவார்; அவர் உறவு, உன் நிறைவு! அவர் சொல்வதைக் கவனி! ஊடே பேசாதே! உன் பேச்சை இரண்டொரு வார்த்தையில் சுருக்கு; அவர் பேச்சைக் கருத்துடன் போற்று! நீ, உயர்ந்த இலக்கியங்களைப் படிக்க வேண்டும்! ஃபிரெஞ்சு மட்டும் போதாது; ஹோமரை நீ, நன்ருகப் படி! வறட்டு நூல்களைத் தொடாதே! கவி பாட உனக்கு ஆசை யிருக்கிறது; ஆனல், மொழியறிவும், பொருளறிவும், உள்ளுணர்ச்சி

யும் நிறைவாயிருந்தாலே கவி செழிக்கும். அவசரப் படாதே! உன் கடிதங்களில் எழுத்து சீராயில்லே; நிறுத்தி அழகாக எழுது; எதைச் செய்தாலும் பூரணமாகச் செய்! உன்னைக் குறை சொல்வதாக நினைக்காதே! ஒரு தந்தையின் கடமையை நான் செய்கிறேன்; உன்னிடம் எனக்கு அளவற்ற அன்பு; என் இளகிய மனத்தை நீ அறிவாய். மகனே, நன்ருகப் படித்து, நல்ல பெயர் வாங்கி, நாலு பேருக்கு நல்லவனுக நடந்து புகழோங்கி வாழ்!" என்றிவ்வாறு இனிமையாகக் கடிதங்கள் எழுதினுன், ராஸீன்.

---

20. அரசர் அன்பு

ராஸீன் நாடகத் தொழிலேயும் விட்டான்; பேனுவையும் கீழே வைத்துவிட்டான். புத்தக விற்பனேக்கும், பகைவர் எதிர்க்கடையும், முட்டுக்கட்டையும் போட்டனர்; வேலே யில்லே; குடும்பம் வலுத்தது; வருஷம் தவருமல் வட்டி போட்டுப் பிள்ளேகள் பிறந்தன! பிழைக்க வழி? வறுமைதான்! மனத்திற்கு மட்டும் போர்து ராயல் உறவு அமைதியளித்தது. வயிற்றிற்கு? பகைவரின் பொருமைத் தீயில் வெந்து நொந்து, உலகை வெறுத்த ராஸீன், வறுமைத் தீயிலும் விழுந்து வருந்தி யிருப்பான். ஆனுல், அவன் தெய்வ பக்தன்;

மாசற்றவன்; அன்பன்; உண்மையான அருட் கவி. மனிதர் கைவிட்டாலும், கடவுள் அன்பரைக் கைவிடமாட்டார். ஒரு மேலான பதவி ராஸீனைத் தேடி வந்தது!

உயிர்நண்பர் பாலு, அரசரிடம் ராஸீன் நிலைமையைச் சொன்னார். லூயி மன்னன் பெருந்தன்மையன்; புலவரை அறிந்து போற்றும் வள்ளல். "நானே நாடு" என்பது அவன் இறுமாப்பன்றோ? தன் சரித்திரத்தை விரிவாக எழுதிவைக்க விரும்பினான்; அதற்கு இரண்டு புலவர்மணிகளைத் தேர்ந்தெடுத்தான்: ராஸீன், பாலு: இருவரும் நண்பர்; எழுத்தரசர்; இனிய பேச்சாளர். ராஸீன் அரசனுடனேயேயிருக்க வேண்டியது, போக வேண்டியது; அவன் பொழுது போக்கிற்கு இனிமையாகப் பேச வேண்டியது; அவன் வாழ்வைக் குறித்து வைத்து, நிகழ்ச்சிகளை அழகான சொற் சித்திரமாக வரைந்து காட்டவேண்டியது; சமயோசிதமான ஆலோசனைகளையும் சொல்லவேண்டியது. இத்தனையும் ராஸீன் இனிது செய்தான். அரசனுக்கு அவனிடம் அந்தரங்கமான அன்பும் நட்பும் அதிகரித்தன. அரசன், வெர்சேல்ஸில் அவனுக்கு ஒரு மாளிகை தந்து, வேண்டிய சௌகரியங்களும் செய்துகொடுத்தான்; நல்ல சம்பளம், சன்மானம், மதிப்பு, மரியாதை. ராஸீனுடன்

பேசிக்கொண்டிருந்தாலே போதும்; அப் புலவன் பேச்செல்லாம் உயர்ந்த இலக்கியந் தான்!

ராஸீன் நல்ல அழகன்; தாமரைக் கண் ணன்; நடை உடை பாவனைகளில் அப்பழுக் கற்ற கனவான்; பெருந்தன்மை வாய்ந்தவன். அவன் கவியரசன்; புவியரசர் நட்பிற்கு ஏற்ற வன். நாளாக நாளாக, அவனிடம் அரசனுக் குப் பெரும் பற்றுண்டானது; தனது அந்த ரங்கமெல்லாம் அவனிடம் சொன்னான்; தன் படுக்கை அறையிலேயே அவனும் படுக்க உரிமையளித்தான். உறக்கம் வருமட்டும் அர சருக்கு இனிய விஷயங்களைப் பேசிக் கொண் டிருப்பது ராஸீன் வேலையானது. ராஸீனுக்கு மற்றொரு நட்புங் கிடைத்தது: **மாதாம் மாந் தெனோன்!**

---

21. மாதாம் மாந்தெனோன்

ஃபிரான்ஸ்வா மாந்தெனோன், கல்வி சிறந்த கட்டழகி; '**கல்வனீய**'த்திலிருந்து (**Calvanism**) கத்தோலிகை யானவள்; சிறு வயதிலேயே பெற்றோரை யிழந்து, கஷ்டப்பட்ட அநாதை; அவளை **பால் ஸ்காரோன்** (**Paul Scarron**) என்ற கவிஞன் காதலித்து மணந்தான். சொத்துக் குக் குறைவில்லை; சுகத்திற்குத்தான் குறைவு! ஸ்காரோன் அபார மூளையுள்ளவன்; அரிய கவி

ஞன்; நாடகாசிரியன்; ஆனல், படு நோயாளி. இளமைக் குரிய சுகம் எதுவும் அவன் அனுபவிக்க முடியவில்லை. எமனுடன் வாதாடிக் கொண்டே அவன் கவிகளை எழுதினன்; 50-ஆம் வயதில் நோயுடலை உதறிச் சென்ருன். தனது நடுகல் (Grave Stone) மேல் எழுதும் சரமகவியை அவனே பாடிவைத்திருந்தான்:

"இச் சவக்குழியில் உறங்குவோன் வாழ்வு
பரிதாபமானது;
பொருமையற்றது.
அவன் உயிர்விடுமுன், ஆயிரந்தரம்
இறந்தவன் —(சாவுடன்
போராடிக் கொண்டே உயிர்த்தவன்.)—
உலகீர், இங்கே சத்தமிட்டு,
அவன் தூக்கத்தைக் கலைக்காதீர்;
ஏனெனில், பேதை ஸ்காரோன்,
உறக்கத்தைக் கண்டது இன்றிரவே!"

உள்ள மட்டும் மனைவி அவனுக்கு வேண்டியபணிவிடைகள் செய்தாள். கணவன் இறந்த பிறகு, அவள் சும்மா மூலையில் இருந்துகொண்டு அழ விரும்பவில்லை; தனது கல்வி யறிவால் குழந்தைகளுக்குத் தொண்டுசெய்தாள். அவள் அறிவும், அன்பும் லூயி மன்னனுக்குத் தெரிந்தன. மன்னன் அவளை அழைத்துத் தன் மக்களுக்கும், தன் ஆசைக் கிழத்தியின் மக்களுக்கும் கல்வி பயிற்றச் சொன்னன். குழந்தைகளுக்கு எளிய இனிய முறையில் மாந்தெனேன் கல்வி யளித்தாள்; கல்விப் பயிற்சியைப் பற்றித் தன்

கருத்துக்களைக் குறித்து வைத்தாள். அவை ஃபிரெஞ்சிலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. இம் மாது, கல்வி யறிவுடன் கடவுளன்பிலும் சிறந்தவள்; மதப்பற்றுடையவள். இவள் பேச்செல்லாம் உயர்ந்த விஷயங்களைப்பற்றியே இருக்கும். வேலை நேரம் போக, மற்ற நேரங்களைத் தொழுகையிலும், நன்னூல் ஆராய்ச்சியிலும் இவள் கழித்தாள். இவள் குறிப்பேடுகளிலிருந்து சில வரிகளைத் தருகிறேன் :

> "நீங்கள் ஆடல்பாடல், ஆடம்பரமான போகசுகங்களில் வாழ விரும்புகிறீர்களா? நான் எல்லாச் சுகங்களையும் பார்த்து அலுத்தேன். இறைவன் பணியே இன்பம்; அவனை வணங்கலே அமைதி; உலகில் எதுவும் பூரணமா யிராது; இங்கே நிறையின்பம் தேடாதீர்கள்."

> "பெண் பிறவிக்குத் துன்பம் அதிகமே; பெண் கணவனைச் சார்ந்தே யிருக்க வேண்டும்; இதில், சிறுமையில்லை; பெருமையே!"

> "இறைவன் இச்சையால் வருவதைப் பொறுமையுடன் தாங்குங்கள்; உங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வி தாருங்கள்; சன்மார்க்க வழியில் அவர்களைப் பயிற்றுங்கள்; உங்கள் சேவகர்களிடம் பட்சமாயிருங்கள்; அவர்களுக்குப் பிழைப்புத் தாருங்கள்; கடவுள்பால் அவர்கள் மனத்

தைத் திருப்புங்கள் ; தியாகம் செய்யுங்கள் ;
வாழ்வில் வரும் துயர்களைப் பொறுங்கள் ;
சிலுவை யுணர்வுடன் வாழுங்கள் !"

லூயி, இவளிடம் கொண்ட அன்பு, காதலாக மாறியது. அரசன் இவளை இரகசியமாக மணம் புரிந்து, அவள் பேச்சிலும் வடிவிலும் சொக்கிப் போயிருந்தான். இந்த அம்மைக்கு வேண்டிய செல்வமும், செல்வாக்கும் கிடைத்தன. தனது செல்வத்தைக்கொண்டு இவள் 'ஸீர் முனிவர் மடம்" கட்டி, அங்கே அடிக்கடி சென்று, நல்ல போது போக்கினாள். ராஸீனிடம் இவளுக்கு உள்ளன்பு மிகுதி ; அவனது மேதையை அறிந்தவருள் பாலுக்கு அடுத்தபடி இவளையே சொல்லவேண்டும் ! இவளே, ராஸீனுக்கும் அரசனுக்கும் உள்ள அன்பைப் பெருக்கிவந்தாள். தான் அரசனுடன் இருக்கும் போதுகூட, ராஸீன் உடனிருக்கச் சம்மதித்தாள். லூயிக்கு இருவரும் பிரியாத் துணைவராயினர்.

---

22. புதிய நாடகங்கள்

ராஸீன் புலமை இப்படி அரசசேவகத்தில் கழிய, மாந்தெனோன் விரும்பவில்லை ; 'அவன் கவிப் புலமை ஃபிரெஞ்சிலக்கியத்திற்கு இன்னும் பெருமை செய்யவேண்டும்' எனத் தூண்டினாள் ; புதிய புதிய நாடகங்கள் எழுதச்

சொன்னாள். "போதுமம்மா போதும் நாடகம்; பட்டபாடு போதும்!" என்று பெருமூச்சு விட்டான் கவியரசன். அம்மை பிடிவாதமாகத் தூண்டினாள். ராஸீன் இரண்டு புண்ணிய நாடகங்கள் எழுதினான்—**எஸ்தர், அதாலி.**

நடையிலும் சுவையிலும், இவ்விரு நாடகங்களும் இணையற்றன. இரண்டும் பிரான்ஸில் கல்லூரி வகுப்புகளுக்கு இன்றும் பாடமாயுள்ளன. ராஸீன் அதாலி நாடகம் எழுதியிராவிட்டால், உலகிற்கே ஒரு நஷ்டமாயிருக்கும்; அஃது, அவ்வளவு உயர்ந்த இலக்கிய மணி! அதன் கதை "**பூசாரி செய்த புரட்சி**" என்ற பெயரால் இந்நூலின் பிற்பகுதியில் வந்திருக்கிறது. **எஸ்தர்** கதையும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது.

அரசாங்க வேலையூடும், ராஸீன் அடிக்கடி போர்து ராயலுக்குச் சென்று அமைதி நுகர்ந்தான்; மலர்களிடையே உலாவி மனங்களித்தான்! அரசனுக்காக அவன் தனது கொள்கையை விடவில்லை.

---

23. சரித்திர வேலை

ராஸீன் தன்னால் இயன்றமட்டும் அரசனை மகிழ்வித்தான்; அரசன் வரலாற்றை அங்குமிங்குமாக எழுதிவைத்தான். ஆனால், அவன் கவி; **மிஷ்லே (Michelet)** போன்ற சரித்திரப்

புலவன் அல்லன்; இருந்தாலும், நல்ல நடையில், காலவிளக்கம் எழுதிவைத்தான். அவன் இறந்து 28-ஆண்டுகளுக்குப் பிறகுதான் அக் குறிப்புகள் வெளியாயின. அவன் இருந்த வீடு தீப்பிடித்து எரிந்துபோனது. எத்தனையோ அரிய நூல்கள் தீக்கு இரையாயின. ஆதலால் அவன் சரித்திரக் குறிப்புகளும் இங்குமங்கும் தொட்டும் தொடாதுமா யிருந்தன. பிற்காலச் சரித்திர ஆசிரியருக்கே அவை பயனுயின. மாதிரிக்காக ஒரு குறிப்பைத் தருகிறேன்:—

> ''நேற்று அரசன் தனது சேனையையும், லுக்சம்பர்கு சேனையையும் பார்வையிட்டார். அது, கண்கொள்ளாக் காட்சியா யிருந்தது. இப்படிப்பட்ட காட்சியை ருமானியரும் கண்டிருக்க முடியாது. நேற்று 1,20,000 வீரர், நான்கு அணியாக நின்றனர். நான் 11-மணிக்குக் குதிரை ஏறி, சேனை முழுதையும் பார்க்க இரவு 8-மணி வரையில் ஆனது. ஓர் அணியின் முனையிலிருந்து மற்ருேர் அணிக்குச் செல்ல 2-மணி நேரம் பிடித்தது. முரசுகள் முழங்கின; வாட்கள் மின்னின; துப்பாக்கிகள் வீரர் கையில் படபடத்தன. இந்தப் படைக் காட்சியைக் கண்டு நான் விலவிலத்துப் போனேன் - (21-5-1692).'' (இக் குறிப்பு, பாலுவுக்கு ராஸீன் எழுதின கடிதத்திலிருந்து எடுத்தது.)

24. கொர்நெல் புகழ்

ராஸீன் பெரிய பதவியி லிருந்தான்; ஃபிரெஞ்சுக் கலைக்கழகத்தில் அங்கம் வகித்தான். அவனுக்குப் பகைவர் எவ்வளவோ தீங்குகள் செய்திருந்தனர். அவற்றிற்கெல்லாம் இப்போது அவன் பழிவாங்க முடியும். ஆனாலும், அவன் கனவிலும் பிறருக்குத் தீங்கு நினைக்கவில்லை.

1684-ல் (78-ஆம் வயதில்) கொர்நெல் இறந்தார். ஃபிரெஞ்சுக் கழகத்தில் ராஸீன் கொர்நெல்லைப்பற்றி ஓர் அற்புதமான புகழுரை கூறினான். அஃது, இலக்கியப் புகழ்பெற்று விளங்குகிறது:

> "கொர்நெல் மறைவு, ஃபிரெஞ்சிலக்கியத்திற்கே கொடிய நஷ்டமாகும். அவர் இக்கழகத்தில் அங்கம் வகித்தார். கழகம் அவரை மதித்துப் போற்றியது. அவ்வளவு பெரிய வித்துவானுடன் நாமும் அங்கம் வகித்து இலக்கியப் பணிசெய்தது நமக்குப் பெருமையாகும். ஃபிரெஞ்சு அரங்கம் அழகு, கலைச்சுவை, ஒழுங்கு, அணியின்றி அலங்கோலமா யிருந்தது. நல்ல நாடகங்களே இல்லை. நடிகரும், வெறும் வார்த்தைகளைக் கொட்டி வித்தை காட்டிக் கொண்டிருந்தனர்; உணர்ச்சி இல்லை. எழுந்தார் நம் சகோதரர் கொர்நெல்; காலக் கேட்

டுடன் போர் புரிந்தார்; கலையின் பெருமையை நிலை நாட்டினர்; உள்ளத்தை அள்ளும் வீர நாடகங்கள், சரித்திர நாடகங்கள் எழுதி அரங்கேற்றினர். நமது வீர நாடகத் தந்தையாக விளங்கினர். எத்தனையோ புயல்கள், துயர்கள், பகைச் சூருவளிகள், குறும்பர் கொக்கரிப்புகள் சூழ்ந்தன. அத்தனையையும் எதிர்த்து வென்று, அவர் கலைக்கொடி நாட்டினர்! லா ஸித், ஒரோஸ், ஸின்ன, பாம்பே (Le Cid, Horace, Chinna, Pompey) முதலிய அவர்தம் நாடகங்களை எத்தனையோ தடவை பார்த்து வியந்துள்ளோம்! எத்தனையோ மொழிகளில் அவை விளங்குகின்றன. ஆ, அவர் நாடகத்தின் நடையே நடை! என்ன உணர்ச்சிப் புயல்! வீரக்கனல்! ஆவேச வெள்ளம்! எவ்வளவு பெருந்தன்மையான சொற்கள்! பாத்திரங்களை அவர் எவ்வளவு கவனமாகச் சிற்பஞ் செய்துள்ளார்! அவர், அரங்கை ஆண்ட கலையரசர், கவியரசர்!"

* * *

இதே புகழுரை ராஸீனுக்கும் தகும்! அவன் வாழ்க்கை, கண்ணீரினின்று எழுந்தது; கலைவனத்தில் மீண்டும் உலாவியது; அரசர் சலுகையில் அன்ன நடை நடந்தது.

25. பாசம் விட்டது

ஆனல்? அரசர் சலுகையும் ஒரு நிலையா? நேற்று எட்டாம் ஹென்றியின் செல்வச் சிறப்பில் தவழ்ந்த கார்டினல் உல்சி (Cardinal Wolsey) இன்று தூக்குமேடையில் தொங்க நேருகிறது! அரசர் சலுகை, கடற் பிரயாணம் போன்று அபாயமானது: புயல் வீசிக்கொண்டேயிருக்கும்! அரசர் சலுகை ராஸீனைப் பள்ளியறைக் குள்ளேகூடக் கொண்டு சென்றது! அரச குடும்பத்திற்கே உரிய மரியாதையை ராஸீன் அடைந்தான்! காக்கைபிடிக்கும் சில பொறாமைக்காரர்களுக்கு இது பொறுக்குமா? அரசனுக்கு ஏதேதோ புகார்கள் சென்றன. இதற்குள் போர்து ராயல் ஜான்ஸோனியன் மதத்தார்மேல் எதிரிகள் கட்சிகட்டினர். லூயிக்கும் போர்து ராயல் பிடிக்கவில்லை. அரசனுக்கு ஆகாதது, ஒரு கணமும் இருக்க முடியாது; அக்காலம் அப்படி! நம் ராஸீன் தீர்ந்த ஜான்ஸோனியன்; தன்னை வளர்த்த போர்து ராயல் மடத்தில் அன்புவைத்தவன். அரசன் அபிப்பிராயத்தைக் கவனிக்காமல், அவன் அடிக்கடி அங்கே சென்று, திருவிழாக்களில் கலந்து கொண்டான்; தன் வணக்கத்திற்குரிய ஆசிரியர்களைப் போற்றினன். இஃது ஒரு குற்றமா? அக்காலம் பொது ஜனங்கள் பட்ட துயரத்தை ராஸீன் பாட்டாக்கினனம்! துயரம் ஒழியும் வழி

யென்ன? அதையும் பாடித்தானிருப்பான்! அரசன் அந்தக் கவிதையைப் பார்த்து முகஞ் சுளித்தான். இன்னும் சில நுட்பமான காரணங்களால் ராஸீன் மனம் விட்டுப்போனது. சில நாட்கள் அவன் அரச சமூகத்திற்கு வராமல் தன் இடத்திலேயே இருந்தான்.

ஒருநாள் தோட்டத்தில் மாதாம் மாந்தெனேன் இரகசியமாக ராஸீனைச் சந்தித்து, "ராஸீன், நீயில்லாது நாட்கள் ரஸமாயில்லை. வா, நான் சமாதானம் செய்து வைக்கிறேன்; அரசன் மனம் தெளியும். முன்போல் அன்பும் ஆதரவுமாயிருப்பார். என்னை நம்பு!" என்று வேண்டினள். "அம்மா, உன்மேல் நம்பிக்கைதான்; அரசன் மனம் உன் சொற்படி ஆடும்; உண்மை. ஆனல், என் அத்தை ஒருத்தி இருக்கிருள்; அவள் உன்னை விட என்மேல் பிரியமுள்ளவள். அவள் எனக்காகத் தினம் இறைவனையே வேண்டுகிருள்: 'எனக்குத் தாழ்மையும் சிறுமையும் வந்து உலகவாழ்வு புளித்துப் போய், நான் இறைவனிடமே என் மனத்தை வைக்க வேண்டும்' என்பது அவள் கருத்து. அப்படியே நான் செய்கிறேன். அரண்மனையைவிட எனக்குச் சாந்தமான இடம் ஒன்றுண்டு. அங்கே நான் செல்கிறேன். ....அம்மா!" என்ருன் ராஸீன். திடீரென்று சத்தம் கேட்டது. லூயி மன்னனே அதோ

வருகிறான்! ராஸீன் ஓடி மறைந்தான்; தோழி அரசனிடம் சென்றாள்.

அக்காலம் சுயேச்சாதிகாரம்; அது ராஸீனுக்குப் பிடிக்கவில்லையென்பது உண்மை. ஜனங்களுக்கு அரசன் கண்டபடி வரி போட்டான். வரிச் சுமையைத் தணிக்கவேண்டுமென்று ராஸீன் பாடினான்; மாதாம் மாந்தெனேனுக்கும் எழுதினான்! தன் மனம் புண்பட்டதை வெளிப் படையாகக் காட்டினான். எனினும், அரசன் அவனை வெறுக்கவில்லை; அவன் தாராளமாக வரலாம், போகலாம். ஆனால், அரசன் அவனுடன் முகங்கொடுத்துப் பேசுவதில்லை. முன்போல் அவனும் அரசனை மகிழ்வுறுத்தவில்லை. உலகின் உறவே அப்படித் தானே! தித்திப்புந் தெவிட்டும்; அது போலவே, செல்வர் நட்பும்!

---

26. இறைவா!

உலகமே ராஸீனுக்குப் புளித்துப் போனது: ஒரே ஆண்டுதான் அவன் இருந்தான். அந்த ஆண்டு அவனை மிகவும் சோதித்தது. அரண்மனைச் சலுகை அப்படி முறிந்தது! மூத்தமகன் ழேன் பாப்திஸ்து ஃபிரெஞ்சுத் தூதனுகை உலாந்தா சென்றான்—(1698). இரண்டாம் மகள் கன்னி மடத்தில் சேர்ந்தாள்; இன்னும் குடும்பத் துயர்கள் பல. அத்துடன் ராஸீ

னுக்கு ஈரற் புண்; அசாத்திய வலி; வைத்தியம் பலிக்கவில்லை. "ராஸீனின் இறுதி நாட்கள் கவலை நிறைந்தன; அவன் கண்கள் மனக் கண்ணீரில் தோய்ந்தன"— என்கிறார் ஒரு கவி. ராஸீன், மனத்தைக் கடவுளிடமே வைத்தான்; தனது வாழ்வை அவன் கையிலேயே ஒப்புவித்தான்; அவன் கட்டளைக்கே காத்திருந்தான்; இறுதி நாளில் எழுதிய கவிதைகளைச் சிறிது திருத்தினான்; பிடிக்கவில்லை; எல்லாவற்றையும் அப்படியே தீயில் அள்ளி வீசினான்; இறைவனையே சிந்தித்தான்:

"இறைவனே, என்னுள் எவ்வளவு கொடிய போர் நடக்கிறது! உள்ளே இரண்டு பேர்களைக் காண்கிறேன்: ஒருவன் உனக்கு உண்மையா யிருக்கிறான். உன்னையே, உன் விண்ணையே விரும்புகிறான்; உன் பற்றின்றி, மற்றப் பற்றுகளைத் தூசி போல ஒதுக்குகிறான்: இன்னொருவன் மகா பாபி; உன்னை எதிர்க்கிறான்; என்னை உலக மாயத்திற்குப் பிடித்திழுக்கிறான்.

இறைவனே, என்னுடனே நான் போராடுகிறேன். அமைதி யெங்கே? நான் விரும்பிய நன்மையைச் செய்ய முடியவில்லை; நான் வெறுக்கும் தீமையைச் செய்கிறேன். அருட்சோதி இறைவா, வா! என்னையாள்! எதிர்செய்யும் இப்பகைவனைக் கைதியாக்கி என்னை விடுவி; அடிமை தீர்!

ஆண்டவனே, உலகச் சீர் ஒரு நிலையா? மனிதரைச் சார்ந்து மனிதன் இன்புறவா? மனிதர் செல்வப் பெருமையெல்லாம் கடலிற்செல்லும் கப்பல் தடம் போல் ஒரு நிமிஷத்தில் மாறிப்போகின்றது! மனிதனுடைய ஆடம்பர வாழ்வெல்லாம் வீணுக முடிகிறது. உலக சுகபோகங்களுக்கு அடிமையானவன் மகிழ்வதில்லை; மயங்கித் துயர்ப்படுகிறுன்.

இறைவனே, உன் அன்பிற்கு அடிமையானவனே அமைதி சேர்கிறுன். உனது அருள் வெள்ளம் அனைவரையும் கர்ச்சித்தழைக்கிறது; எல்லாரும் அதை அள்ளிப் பருகலாம். ஆனல், அறியாத நாங்கள் சேற்றில் விழுகிறேம்; ஏமாற்றக் குண்டில் தாகந்தணிக்க மொள்கிறேம். அது வெறும் கானல் நீர்; தாகந் தணியவில்லை.

உலகச் செல்வத்தை நம்பாத உன் உண்மைச் செல்வனே செல்வன்! அவன் பரலோகச் செல்வன்! உன் அழைப்பு வந்ததும், ஒரு கவலையின்றி விரைவாகப் பிரிந்து உன்னிடம் வருகிறுன்; உண்மைச் செல்வத்தை அடைகிறுன். நீ சாந்த வொளி காட்டுகிறுய்; நாங்கள் கண்ணை மூடிக் கொண்டு இருட்டில் கவலைப்படுகிறேம்— அறியாமை! உலகில் ஆடம்பரச் சுற்றங்களுடன் அமளியாக வாழ்கிறேம். இறுதி நாளில் யார் உடன்வருவார்? ஒருவரு

மில்லை! தனியே பாபமூட்டைகளைச் சுமந்து, தள்ளாடி, விசாரணைக்காக உன் முன் வருகிறோம்!

இறைவா, என் தீமைகளை எண்ணியெண்ணிக் கண்ணீர் விடுகிறேன்; மற்றப் பற்றுகளை விட்டேன்; உன்னடியை நெஞ்சால் தொட்டேன்; அதை விட மாட்டேன்! ஞானச்சுடரே, என் விழியைத் திற; வழியைக் காட்டு; என் இதயமுடிச்சை அவிழ்; ஆசையாணவப் பேய்களை ஓட்டு; இருளைத் துடை; பாபந் தீர்! பரம பிதாவே, என்னை ஆண்டு கொள்!"

21—4—1699: ஆண்டவன் அன்பனை ஆண்டுகொண்டான்!

மகாகவி ராஸீன் உடலை உதறிப் பரம பிதாவிடம் பறந்து சென்றான். மணியிழந்த நாகம்போல், இக் கலைமணியை இழந்த நண்பர் கண்ணீர் விட்டனர், ராஸீன் வேண்டுகோட்படியே, அவன் உடல் போர்து ராயல் மயானத்தில் புதைக்கப் பெற்றது; சடங்குகள் ஆடம்பரமின்றி நடந்தன. நடுகல் மேல், நண்பர் பாலு இலத்தீனில் புகழுரை எழுதினர்; அதன் சுருக்கம்:

"**ழேன் ராஸீன்** இங்கே உறங்குகிறார். அவர், பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்;

அரசனுக்குக் காரியதரிசியாகவும், தனதாக வும் ஊழியம் செய்த அன்பர்; ஃபிரெஞ்சுக் கழகத்தில் அங்கம் வகித்த 40-புலவருள் ஒரு வர்; ஒப்புயர்வற்ற கவியரசர்; சோக நாடகங்களில் புகழ்பெற்ற கலைஞர். பட்டம் பதவி கலைப்புகழ் எதையும் அவர் கருதா தவர். அவர் மனம் சதா இறைவனிடமே சென்றது; இறுதிக் காலத்தில் நாடகக் கவிகளைக் கூட விட்டுவிட்டார்; இறைவ னையே பாடினார்; புனிதர்; புண்ணியர்; உண்மையான கிறிஸ்துபக்தர். அவர், அரசன் வரலாற்றை எழுத மேற்கொண் டார். ஆனால், நோய் வந்து தடுத்தது; படுத்தார்; நோயை நோகாமல், சித்தத்தை ....இறைவனிடமே வைத்து, உயிர் பிரிந்தார். அவர் ஆவி சாந்தமாகுக!"

---

27. ராஸீன் நாடகங்கள்

ராஸீன் எழுதிய நாடகங்களின் விபரம் கீழே காண்க: அவற்றுள், மாதிரிக்காக, (1) பேதுரி, (2) பூசாரி செய்த புரட்சி, (3) அலெக் சாந்தர், (4) எஸ்தர் என்ற நான்கு நாடகக் கதை மணிகளை அவன் நடையிலேயே தமிழில் எழுதிக் காட்டியிருக்கிறேன். அவற்றை அன் பர் பருகி இன்புறுக!

நாடகம்:	எழுதிய ஆண்டு
1. தேபேது (Thebaide)	கி. பி. 1664
* 2. அலெக்சாந்தர் (Alexandre)	1665
3. அந்த்ரோமாக் (Andromaque)	1667
4. வக்கீல்கள் (Le Plaideurs)	1668
5. பிரிடானிகஸ் (Britanicus)	1669
6. பஜாஃஜே (Bajazet)	1672
7. மித்ரிதாத் (Metridate)	1673
8. இஃபிழெனி (Iphigenie)	1674
* 9. பேதுரி (Phedre)	1677
*10. எஸ்தர் (Ester)	1689
*11. அத்தாலி (Athalie)	1691

---

* இந்த நான்கு நாடகக் கதைகளையும் இந்நூலின் பிற் பகுதியில் காண்க.

II. ராஸீன் நாடகக் கதைகள்

1. பேதுரி (Phedre)

(அல்லது காமக் கொலை)

[ராஸீன் எழுதிய பேதுரிக்கு முன்னுரையாகச் "சித்திராங்கி" கதையைக் கேளுங்கள் :]

இராஜமகேந்திரபுரத்தை நாட்டியவன் **விஜயாதித்யன்**; அவனுக்குப் பிறகு **விஷ்ணுவர்தனன்** (கி. பி. 918-925), **அம்மராஜன்** (கி.பி. 945-973) ஆகிய இருவரும் ஆண்டனர்; பிறகு **இராஜநரேந்திரன்** (கி. பி. 1022-1063) அரியணையேறி அரசாண்டான். அவன், அறமும், கலையும், செல்வமும், கல்வியும் வளர்த்தான். மஹாபாரதம் பாடிய நன்னயபட்டர் அவன் காலத்திலேதான் விளங்கினர்.

இராஜ நரேந்திரனுக்குச் **சாரங்கதரன்** என்ற அருமையான மகன் இருந்தான்; அழகன்; அறிஞன்; குணவான். அவனே இளவரசன். நாடு அவனை நம்பி யிருந்தது. அவன் வாழ்வைக் கெடுக்க ஒரு பெண் எமன் வந்தது— **சித்திராங்கி**! சித்திராங்கி செருக்குப் பிடித்த மேட்டிமைக்காரி; இராஜநரேந்திரனின் இளையாள்; காமராட்சஸி; சாரங்கதரனிடம் அடங்கா மையல் கொண்டவள்!

அரசன் வேட்டைக்குச் சென்ற நாள்; சாரங்கதரன் புரு பறந்து, சித்திராங்கி மாளிகைக்கு வந்துவிட்டது; அதைத் தேடி இளவரசன் வந்தான். சமயம் வாய்த்தது; சித்திராங்கி தனது ஆசையை வெளியிட்டாள். வாலிபன், "அன்னையே, நான் உன் பிள்ளை; உன்னைச் சிந்தையாலும் தொடேன்; ஆசையை மற!" என்றான். பசுவைக் கண்ட புலி விடுமா? சித்திராங்கி தனது காம வேகத்தையெல்லாம் கொண்டு பலாத்காரம் செய்தாள்; அவனைக் கட்டிப் பிடித்தாள். சாரங்கதரன் அவளை உதறித் தள்ளி ஓடித் தப்பினான்.

காமம், குரோதமாக மாறியது: அரசன் வேட்டையாடி வந்தான். சித்திராங்கி பாசாங்கு செய்து, "உங்கள் இளவரசன் என்னைப் பலாத்காரம் செய்து என் மானத்தைக் கெடுத்தான்; கொடியன்; தடியன்; மடையன்! அவனை உயிருடன் விட்டால் பிசகு!" என்று கோளேற்றி, நீலிக் கண்ணீர் வடித்தாள். முன்பின் சிந்தனையின்றி, அரசன் மகனைச் சினந்து, கொலையாளிகளிடம் ஒப்புவித்து, அங்கச்சேதம் செய்து புதைக்கும்படி ஏவினான். குற்றமற்ற சாரங்கதரன் கொலைவாளுக்கு இரையானான். இதைக் கேட்ட சித்திராங்கியின் மனம் வேதனை செய்தது. அரசனிடம் அவள் குற்றத்தை ஒப்புக்கொண்டாள். அர்சன் அவளைச் சிறையிட்டான்;

சிறையில் பட்டினி கிடந்து மாண்டாள் காமப் பாதகி. இளவரசன் இறந்த அநியாயக் கொடுமையை ஜனங்கள் தாங்காது கிளம்பிப் புரட்சி செய்து, அரசனை விரட்டி யடித்தனர்.

[ராஸீனின் **பேதுரி** நாடகமும் கிட்டத்தட்ட இதே மாதிரி இருக்கும்; கேளுங்கள் :]

I

தேஸே (**Thesee**), திரேசின் மன்னன்; வீரன், தீரன், பலவான். அவன் மனைவி **பேதுரி (Phedre)** கட்டழகி; காம வெறியள். அக்காலம் அமெஃஜான் என்ற வீரப் பெண்கள் விளங்கினர். அவர்கள் அழகிலும் பலத்திலும் சிறந்தவர்கள்; கண்ணம்பு, கையம்பு — இரண்டிலும் வலியவர்கள்; அவர்கள் இராணி, **அந்தியோப்** என்ற **வீராங்கனை. தேஸே** அவளைக் காதலித்து மணந்தான்; இருவர் காதலும் ஒரு ஆண் மகவாகக் கனிந்தது; **ஹிப்போலேத்** என்று பெயரிட்டு, அந்த ஆண்குழந்தையைத் தேஸே பிரியமாக வளர்த்துவந்தான்!

II

ஹிப்போலேத் வீரச்சிங்கம்; அன்பு வெள்ளம்; அறிவுக் கதிர்; பிற மாதரைத் தாயெனக் கருதும் தூயன். குடிகளெல்லாம் அவனிடம் உயிரை வைத்திருந்தனர். ஹிப்போலேத்தைக் காதலித்த குமரிகள் பலர்; ஆனால், அவன் ஒருத்தியையே காதலித்தான். அவளே

அரிஸி என்பாள். அவள் ஆதென்ஸ் இளவரசி. ஆனல், ஆதென்ஸுக்கும் தேஸேக்கும் பகை; ஆதலால், இக் காதல் தந்தைக்குத் தெரியாது, மறைவாக வளர்ந்தது.

III

ஹிப்போலேத்தை மற்ரெரு பாசமனம் நேசித்தது - பேதுரி; தேஸேயின் அரசி! அவள் மோகங்கொண்டு, தன் கண்வலேயில் இவ் வாலிபனைப் பிடிக்க முயன்ருள். இவனுடைய இளமை, வலிமை, திறமை, அழகு, அறிவு, ஆற்றல் எல்லாவற்றையும் காணக் காணப் பேதுரியின் காதல் கொழுந்துவிட் டெரிந்தது! அந்த எரி தாங்காமல், அப் பூங்கொடி வாடித் தவித்தாள்; புயல் போலப் பெருமூச்செறிந்தாள்; காரணம் கேட்டால், "என்னவோ செய்கிறதே!" என்பதைத் தவிர, அவள் வேரென்றும் சொல்வதில்லே. ஹிப்போலேத்தை மயக்க ஜாடையாக ஆயிரம் சாகசம் செய்தாள்; பலிக்கவில்லே.

காமம் மோகமானது; மோகம் தாகமானது; தாகம் பொருமையானது; பொருமை பகையானது! பசியால் வருந்தும் ஒருவன் எதிரே மணக்கும் விருந்தை விரும்பி வாயூறுகிருன்; அது கிடைக்கவில்லே; உடனே விருந்தை வெறுத்துச் சினக்கிருன்! அதுபோலவே, தனது மோகத்திற் குதவாத ஹிப்

போலேத், பேதுரி கண்ணை உறுத்தினன்: "ஐயோ, நான் இப்படி வருந்துகிறேன்; இவன் மட்டும் அமைதியா யிருக்கிறனே!" என்று பொருபொருத்தாள்; கணவனிடம் ஹிப்போலேத்தை விரட்டியடிக்கச் சொன்னள்; பிறகு வேண்டாமென்றுள்! கணவன் இருப்பதுகூட அவளுக்குக் கசப்பாயிருந்தது; "இவர் எங்காவது ஒழிந்தால், எனது எண்ணம் நிறைவேறும்" என்று அவள் மனப்பால் குடித்தாள்.

அப்படியே நடந்தது. தேஸே, ஒரு காந்தத்தில் மயங்கினவனய், நீண்ட பயணம் புறப்பட்டு விட்டான்; எமலோகத்திற்கே போய் விட்டான் என்றும் செய்தி பரவியது! ஆம், பாதாள லோகத்திற்குத்தான் தேஸே போனன்! எதற்கு? அவனுக்கும் மன்மத பாணம் தைத்தது! அரசனெருவனுக்குரிய அழகியை (அவள் பெயர் பிராஸ்பெரைன்) அள்ளிக் கலக்கத் துள்ளியோடினன்! காதல், பூமெத்தையில் கூடும்; ஆனல், காதலின் பாதை பூமெத்தையன்று; அது, முள்ளும், வாளும் முளைத்த பள்ளத்தாக்கு! பயங்கரமான போர் செய்தே வீரன் அழகை அடைய வேண்டியிருந்தது. ஒரு பெண்ணின் கடைக் கண், பெரும்போர் மூட்டியது. அப்போரில் தோற்றுத் தேஸே சிறையுண்டு இறந்ததாக வதந்தி பரவியது—வெறும் வதந்திதான்!

IV

ஹிப்போலேத் தந்தையை உண்மையாக நேசித்தான். அவர் சென்று நீண்டகாலமாகியும், இன்னும் வரவில்லையே என்று கவலை கொண்டான்; தன் நண்பன், தெரமேன் என்பவனைத் தகுந்த துணைவருடன் அனுப்பி நாடெங்கும் சுற்றித் தேடிவரச் சொன்னான். தெரமேன் சொன்னபடியே சென்று திரும்பி வந்து கையை விரித்தான். ஹிப்போலேத்துக்கு இருந்த இடம் புளித்தது. தந்தையைத் தேடுவதாக அவன் பயணம் கட்டினான்.

தெரமேன்: நண்பா, நான் தேடாத நாடில்லை; அரசன் செய்தி தெரியவில்லை. நீ, வீணில் அலையாதே! அமைதியா யிரு!

ஹிப்போலேத்: அமைதியா? இங்கா? இரண்டு வாள் விழிகள் என் உயிர்நிலையைக் குறி வைக்கின்றன. மாற்றாந்தாய் பேதுரியின் அடங்கா வெறியும், கடுகடுப்பும், சிடுசிடுப்பும், சாகசச் சினமும் என்னைச் சித்திர வதை செய்கின்றன. அரிஸி என்னைக் காதலிக்கிறாள். ஆனால், தந்தைக்கு ஆதென்ஸ் விரோதம். அரிஸிக்காகத் தந்தைக்கு எதிர்செய்யவும் விரும்பேன்.

தெரமேன்: நண்பா, பேதுரி ஏதோ மனத்தில் வைத்துக் கொண்டு மெலிகிறாள்; உள்ளே

ஏதோ அவளைக் குடைகிறது; அவள் உனக்கு எதுவும் செய்ய முடியாது. அரிஸி யின் காதலோ உண்மையானது. அவளை நீ யேன் வெறுக்க வேண்டும்?

ஹிப்போலேத்: ஐயோ, வெறுப்பன்றே; விருப் பந்தான் பகையாக வந்து என்னை வெருட்டு கிறது. குலம் வேறா யிருக்கிறது!

தெரமேன்: காதல் உள்ளங்கள் சாதி குலம் பார்ப்ப துண்டா? காதல் இணைக்கும் போது, கட்டுப்பாடு என்ன செய்யும்? உன் உயிர் அரிஸியிடம் உள்ளது; அவளை நீ, வனத்திலும், மனத்திலும் சந் தித்து வணங்குகிறாய். நீ வீரன்! தகப்ப னிடம் தைரியமாகச் சொல்! அவர் ஆதென்ஸைப் பகைத்தாலும், உன் காத லைப் பகையார்; அவரே காதல் வலைப் பட் டவர். காதலே உலகம் என்பதை அவர் அறிவார்; அந்தியோப்பின் காதலின்றி, உன்னைப் போன்ற மணிப் பிள்ளை அவ ருக்குக் கிடைத்திருக்குமா? உனக்கொரு சந்ததி உண்டாவதை அவர் தடுப்பாரா? நண்பா, அரிஸியைக் காதலி! காதல் மலர்ந்து கனியட்டும்; மரபு வாழட்டும்!

ஹிப்போலேத்: அன்பா, என் தந்தை ஒரு நாளும் இந்தக் காதலை ஒப்பார்; பேச்சை

இத்துடன் நிறுத்துவோம். இதோ நான் தந்தையைத் தேடிப் புறப்படுகிறேன்.

V

இதே சமயம், பேதுரி காமவெறி பிடித்துத் தனது தோழி ஏநோனிடம் புலம்புகிருள். ஏநோன் பொல்லாச் சாகசி; மோசக்காரி.

பேதுரி: ஏநோன், இனி நான் பிழைக்க மாட்டேன்; கால் தள்ளாடுகிறது; நிற்க முடியவில்லே; உயிர் ஊசலாடுகிறது....ஹூம்!... இந்த அணிமணிகள் எதற்கு? வெறுஞ் சுமை! தாங்க முடியவில்லே; எடுத்தெறிகிறேன். என் அலங்காரம் என்னேயே கேலி செய்கிறது!

ஏநோன்: அரசி, இஃதென்ன? அலங்காரம் செய்யச் சொல்கிருய்; பிறகு அதையே நோகிருய்! விடியாதா என்கிருய்; விடிந்ததும், இருட்டாதா என்கிருய்! வாழ்வை வெறுக்கிருய்; சாவை அழைக்கிருய்! உனது துன்பமென்ன?

பேதுரி: எனது துன்பத்தை எப்படிச் சொல்வேனடி? சொல் நெஞ்சை அடைக்கிறது; என்னே அறியாமல் கண்ணருவி பெருகுகிறது; மானம் பிடுங்கித் தின்கிறது.... இழவு மானம்!

ஏநோன்: அரசி, உன் மௌனத் துயர் மர்மமா யிருக்கிறது: உண்ணுய், உறங்காய்; உடல் துரும்பானுய்! இது தற்கொலையா? நீ ஒரு பாபமும் செய்யவில்லையே! ஏனிந்த வீண் புலப்பம்? உன் குழந்தைகளை நினை; கண வரை நினை; நீ போனுல், அதோ உன் பகைவன் ஹிப்போலேத்......

பேதுரி: ஆ, என்ன பெயரடீ சொன்னுய்! அந்தப் பெயரைக் கேட்கக் கேட்க எனது துன்பம் மலைபோல் வளருதடீ! ஆ, காதற் கடவுளே—**வீனஸ்**! எனக்கேன் இந்தக் கனலை மூட்டினுய்? வேகுதே நெஞ்சம்! சொல்லவும் முடியவில்லை, மெல்லவும் முடியவில்லையே!

ஏநோன்: அம்மா, சொல் உன் உள்ளத்தை! உனக்காகப் பிள்ளை குட்டிகளை விட்டு வந்து துணை யிருக்கிறேன்; என்னிடமும் ஒளிப்பா? என் உயிர் நீ! நீ போனுல் நானும் உயிர் விடுவேன். சொல்! உடை மோனத்தை!

பேதுரி: ஆ, ஏநோன், என் காதலுக்கு வாயில்லையடி! வெட்கம் தொண்டையை அடைக்கிறது....ஆ, காதலே எனது நோய்; எனது கவலை; எனது துன்பம்! காதலே, கனலே!

ஏநோன் : அந்தக் கனலை மூட்டினவன் யார்? சொல்....நானிருக்கிறேன்!

பேதுரி : தோழி, அந்த அமெஃஜான் மகன்!.... அவன் பெயரை எப்படிச் சொல்வேனடி! அவனை ஒழிக்க நினைத்தேன்; பழி வாங்கி விட்டான். இப்படியானேன்!

ஏநோன் : ஹிப்போலேத்! அவனையோ—உன் மகனையோ—காதலித்தாய்! அடகடவுளே! கணவனிருக்கும்போது........

பேதுரி : தோழீ, நான் "**கணவன்**" என்பவனைக் காதலிக்கவில்லை; இவனையே கண்டதும் காதலித்தேன்! ஊருக்குப் பயந்து, பேருக்குக் கணவன் கையைப் பிடித்தேன்! தெய்வ சந்நிதியில் தூபம் போடும் போது, எனது நெஞ்சில் இவன் ஆசைத் தூபத்தையே தூண்டினேன்! உடலைக் கணவனுக்கும், உள்ளத்தை இவனுக்குந் தந்தேன்! அவர் மெத்தையில் படுத்தேன்; இவனை எண்ணித் துடித்தேன்! இவனைக் காணக் காணக் கனலால் வாடினேன். என்னை எரிக்கும் கனல் அவனை எரிக்கவில்லை! பொறுமை கொண்டேன்; அவனை ஊரை விட்டே துரத்தச் சொன்னேன்; மறுபடியும் அவனைக் காண எனது காதல் கடலானதடி! ஐயோ, இந்தப் பழிக்

கென்ன செய்வேன்! கணவன் கேட்டால்........!

இச்சமயம், "ஐயோ, அரசி, தங்கள் கணவன் இறந்து போனர்" என்று தோழி பெனுப் விம்மி யழுதுகொண்டே வந்தாள். "ஆ,மெய் தான?" என்று பேதுரி, துள்ளியெழுந்தாள்! "மெய்தானம்மா!"என்று கூறி, "தந்தையைத் தேடப் புறப்பட்டான் ஹிப்போலேத்; கடற் கரையில் மாலுமிகளிடம் இச்செய்தி கேட்டுத் திடுக்கிட்டான்; ஜனங்கள் அவனேயே அரியணே யேற்ற முறையிடுகின்றனர். அரிஸி, அவனுக்கு அரசியாகப் போகிருளம்மா!" என்ருள் தோழி பெனுப். அதற்கு, ஏநோன், "போதும், அதிகம் பேசாதே! அரசி மனம் தாங்காது; போ!" என்று அவளே அனுப்பினுள்; பிறகு பேதுரியைத் தூண்டினுள்: "அரசி, இனி நீ வாழ வேண்டுமானுல் ஹிப்போலேத்துடனே தான் வாழ முடியும்; அவன் அரசன்; அவன் மனத்தை அந்த அரிஸி கவருமுன் செல்; உன் மனத்தைச் சொல்; அவனே வேண்டு; ஆசையைத் தூண்டு! அப்போதே நீ அரசியாக வாழ முடியும்; இன்றேல், அடிமை தான்....செல்!"

இதைக் கேட்ட பேதுரி கலக்கமுற்றுச் சோர்ந்து, ஏநோனின்மேற் சாய்ந்தவளாய் உட்சென்ருள்.

VI

தந்தை இறந்த செய்தி கேட்ட ஹிப்போலேத் நேராக அரிஸியிடம் சென்றான். அரிஸி அவனை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

ஹிப்போலேத் : என் அருமைக்காதலீ, என் தந்தையைத் தேடப் புறப்பட்டேன் ; ஆனால் அவரை, இனி, என் கண் காணாது : மஹா ஜனங்கள் என்னையே அரசனாகத் தேர்ந்தனர். நான் அரசனானால், நீ அரசியே! ஆனால், இப்போது நான் இங்கே தங்க முடியாது. கிரேக்கர், 'நான் அன்னியன் மகன்' என்று வெறுக்கின்றனர் ; சிலர் 'என்னை அகங்காரி' என்று எண்ணுகின்றனர். முன்பே, குலச் சண்டைகள் இந்நாட்டை இரத்தகளமாக்கின. என் தந்தையாருக்கும், உன்னவருக்கும் நடந்த கொடும் போரை யார் மறக்க முடியும்? காதலீ, விடை கொடு! இப்போது நான் செல்வதே நல்லது.

அரிஸி : ஆ, நாதா, இது நனவா, கனவா? என் முன் இப்படிப் பேசுவது தாங்களா? என் காதல் மணியா? என்னைப் பிரிவதாம்! தங்களைப் பிரிந்து நான் வாழ்வதாம்!....ஆ, அவ்வளவு விருப்பம், இவ்வளவு வெறுப்பானதே!

ஹிப் : கண்ணே, உன்னை வெறுப்பதா? நானா? கனவிலுமில்லை. உன் வசப்பட்ட எனக்குப் பிரிவேது? மனத்தில் உன்னைக் கொண்டு செல்கிறேன்; உயிர்த் துடிப்பில் உன்னுடன் வாழ்கிறேன்!

அரிஸி : என் காதல் புளித்ததாக்கும்! வெளிப் பசப்பேன்?

ஹிப் : அரிஸி, பொதுவாக நான் காமத்தை வெறுப்பவனே! அதை ஒழிக்க என் மனம் புரட்சி செய்ததுண்டு. காமப் புயலால் கவிழ்ந்து மடிந்த வாலிபர் வாழ்வை நான் பார்த்து வருந்தியதுண்டு. எந்தப் பெண்ணின் கண்வலையிலும் நான் சிக்கினதில்லை. நீ ஒருத்தியே என் மனங்கொண்ட துணைவி! இப்போது காலம் நம்மைப் பிரிக்கிறது; சில காலம் உன் கண், என்னைக் காண முடியாது. ஆனால், என் கருத்தில் நீ வளர்வாய். இருக்கும்போது மறைகிறேன்; இல்லாதபோது காண்கிறேன்! காடு வனங்களிலெல்லாம் என்னுடன் நீ வருகிறாய்; பகலின் ஒளியிலும், இரவின் இருளிலும் உனது அழகை நான் காண்பேன்! அனைத்தையும் துறந்து, உன்னை மட்டும் கலந்து செல்கிறேன்!

VII

இச்சமயம் பேதுரி, பசித்த புலி பசுவை நாடியது போல வந்தாள். சாகஸி ஏனோன் அவளை மெல்ல நடத்திவந்து, இருவரையும் தனியே சந்திக்கவைத்துப் பூனைபோல வெளியே சென்றாள்.

பேதுரி : தாங்கள் எங்கோ செல்வதாகச் செய்தி. கணவர் இறந்தார்; என் மகன் சிறுவன்; அரசாங்கம் பெரிது; அதற்குப் பல பகைவர்; இப்போது தாங்களே அரசைத் தாங்க முடியும்; அத்துடன் தாங்களே என் இடரையும் தீர்க்க முடியும். அதைச் சொன்னால் தங்களுக்குக் கோபம் பொங்கலாம். உங்கள் காதுக்கே என் பேச்சு நாராசமாயிருக்கலாம்.

ஹிப் : தாயே, சொல்லுங்கள் தங்கள் இடரை....!

பேதுரி : நான் அடியோடு தங்களை வெறுத்தவள்; தாங்கள் இருக்கும் இடத்தில் இருக்கவே பொறுக்காதவள்; பொறாமை கொண்டவள்; தங்கள் பெயரை என் காதில் போடக்கூடாதென்று விதித்தவள். என் வெறுப்பைத் தாங்கள் பொறுப்பீர்களா?

ஹிப் : தாயே வழக்கந்தானே; ஒரு தாய், மாற்றாந்தாய் மகனைப் பொறாமை கொண்டு வெறுப்பது உலக வழக்கந்தானே! நான்

ஏதாயினும் குற்றஞ் செய்திருக்கலாம்; அதனால், தாங்கள் வெறுக்கலாம்.

பேதுரி: ஆ, இல்லை; மற்றொரு துயரம் என்னை வருத்துகிறது.

ஹிப்: என்ன? எந்தையைப் பற்றியா? 'அவர் ஒருவேளை உயிரோடிருக்கலாம், திரும்பி வரலாம்' என்று நினைக்கிறேன்.

பேதுரி: இறந்தவர் மீள்வதில்லை; சாவாற்றின் அக்கரைக்குச் செல்லவே படகுண்டு; இக் கரைக்கு மீளப் படகில்லை; படகோட்டி, இறக்கியவரை ஏற்றமாட்டான். ஆனால், என் கணவர் இறக்கவில்லை; அவர் தங் களுள் உயிர்க்கிறார். ஆம், தங்கள் வடி வாகவே இருக்கிறார்; தங்கள் வடிவாகவே என் கணவரைக் காண்கிறேன், பேசு கிறேன்! தாங்களே..........ஆம், அன்று, அப்போதே தங்களையே என் கணவராக மனத்தில் வரித்தேன்! ஆனால், விதி வேறு தீர்மானம் செய்தது. இப்போது என் எண்ணம் கைகூடும்........நாதா!........

ஹிப்: ஹா, என்ன! நான் மகன்; தாங்கள் தாய்; என் தந்தை தங்கள் கணவர்!.... தாயே, இஃதென்ன விபரீதம்! சித்தப் பிரமையா?

பேதுரி: சித்த உறுதியுடனேதான் பேசு கிறேன். தாங்க....ளே!........

ஹிப்: தாயே, இப் பேச்சு என் காதைப் பிளக்கிறது; எனக்கே வெட்கமா யிருக் கிறது; நான் போகிறேன்.

ஹிப்போலேத் ஓடிப்போகிறான். அவன் வாளைப் பறித்து, பேதுரி வெறி பிடித்து ஓடு கிறாள். "என்னுள்ளத்தில் தீ மூட்டிய கள் வனே, தீயை அணை; இன்றேல், இதோ அஃது என்னைச் சாம்பலாக்குமுன், உன் வாள் என் னுயிரைக் குடிக்கட்டும்!" என்று பேதுரி தற் கொலை புரிந்துகொள்ள முயலுகிறாள். அப் போது ஏனோன் குறுக்கிட்டு அவளைத் தேற்றி உள்ளே இழுத்துச் சென்று உபதேசிக்கிறாள்.

VIII

ஹிப்போலேத் ஊரைவிட்டு ஓடிப்போகவே காலெடுக்கிறான். அவனுக்கு அரசவாழ்வும், அரண்மனைச் சுகமும், காம நாடகங்களும் புளித்தன. அச் சமயம் அவனுடைய நண்பன், தந்தை தேஸே உயிரோ டிருப்பதாகவும், விரைவாக வருவா ரென்றும் செய்தி கொண்டுவருகிறான். தந்தையைக் காணவே தாமதிக்கிறான் ஹிப்போலேத்.

பேதுரி கூந்தலைப் பிய்த்துக்கொண்டு புலம் புகிறாள்; அலறுகிறாள்: "அவன் கை என்னைத்

தொடா விட்டாலும், அவன் வாளாவது எனது மார்பில் பொங்கும் ஆசை வெள்ளத்தில் குளிக்காதா? அவனுக்குத்தான், என்னைக் கண்டு வெட்கம்! வாளுக்கும் வெட்கமா? ஆ, அவன் தன் கண்ணால் என்னைக் காண்கிறான்; என் கண்ணால் கண்டால்........! காட்டில் பிறந்து வளர்ந்த முரடன்; அதனாலேதான் பூப்போன்ற காதலிடம் இவ்வளவு கடுமையா யிருக்கிறான்! காதலின்பத்தையே காணாதவன்; பண்படாதவன்! ஆ, இப்படியும் காதலில்லாத உள்ளம் உண்டா? பெற்றோர் காதல்தானே அவனைப் பெற்றது? அந்தக் காதல், மகன் மனத்தில் இல்லையோ?"

தோழி ஏநோன், "அவனுக்குப் பெண்களைக் கண்டாலே வெறுப்பு; நீ பேசாமல் அவனை மற! இதோ, உன்னை ஜனங்கள் அரசியாக ஒப்புக் கொள்கிறார்கள்; முடி புனைந்து அரசாளு!" என்கிறாள்: "ஐயோ, அவனில்லாது நான் உயிர்க்க முடியாதடீ; எப்படி ஆளுவேன்? ஏநோன், ஓடு! அவன் கப்பலேறப் போகிறான். அவன் காலில் விழு; அழு; கெஞ்சு; கதறு! 'பேதுரி உனக்குத் திருமுடி தருவாள்; அரியணை தருவாள்; நீ அரசன்; அவள் உன் அடிமை; அவளைக் கருணையுடன் காப்பாற்று!' என்று மன்றாடு!" என்றனுப்புகிறாள் அரசி. ஏநோன் சென்று, ஒரு செய்தி

கொண்டு வருகிறாள் : "பேதுரி, ஹிப்போலேத் இணங்கான்; உனக்கு அவன் எதற்கு? இதோ உன் கணவர் வந்துவிட்டார்; அவரைப் பார்க்க ஜனங்கள் ஆவலாக ஓடுகிறார்கள்! அவர் உன்னைக் காண இதோ வருவார்!"

பேதுரிக்கு இடி விழுந்ததுபோ லிருந்தது இச் செய்தி : "ஐயோ, என் கணவர் உயிரோ டிருக்கிறாரா? அடி பாவி, என்ன செய்தி கொண்டு வந்தாய்? ஐயோ, அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்? இந்த நான்கு சுவர்களே எனது நடத்தையைப்பற்றி முறையிடுமே! நான் அப்போதே இறந்திருப்பேன்; பாவி, நீ தடுத் தாய்; உன் பேச்சைக் கேட்டே அவன்முன் சென்றேன். ஐயோ, நானேன் பிறந்தேன்? அவமானச்சுமை என்னை நசுக்குகிறதே! அவர் வருமுன் நான் சாகவேண்டும்; என்னைப் போன்ற பாப ஜன்மங்கள் ஒழிவதே நல்லது. அவமானப்பட் டிருப்பதைவிடச் சவமாவதே மேல். என் குழந்தைகளைப் பற்றிக்கூடக் கவலையில்லை. ஆ பாவி, நான் அவர்களுக்குத் தீராப்பழி வைத்தேனே! 'இப்படிப்பட்டவள் குழந்தையா நீ!' என்று உலகம் ஏசுமே! ஒருத்தியால் எத்தனை இழிவு, துன்பம்! தோழீ, நான் இதோ இறக்கிறேன்.

ஏநோன் : "பேதுரி, என்ன பேதமை? நீ இறப்பானேன்? இஃதென்ன பிரமாத

மான அவமானம் என்று நோகிருய்! உன் இரகசியம் யாருக்குத் தெரியப் போகிறது? நீ இறந்தால், குட்டு வெளிப் படும்; உன் குற்றம் உலகிற்குத் தெரிந்து போகும். ஆகையால் நீ இறக்க வேண்டா! ஆனல், நீ உடனே அதை மறைத்து விடலாம்.

பேதுரி : எப்படி மறைப்பேன்? அந்த எமன், அப்பன் காதில் ஊதி விட்டால்! அவ னிடம் அவருக்கு உயிராயிற்றே!

ஏநோன் : யுக்தி தெரியாமல் உளருதே! ஒரு சாகஸம், பிறகு உனக்கே வெற்றி! ஒரு பெண்ணுக்கு இது தெரியாதா? **'அவள், என்னை'** என்பதன் முன் **'அவன், என்னை'**... என்று ஏட்டைத் திருப்பிவிடு. "நாதா, தாங் களும் ஊரிலில்லை; ஹிப்போலேத்தைப் பற்றி முன்பே சொல்லி யிருக்கிறேன். அந்தத் தடிப் பிரமசாரி என்னைத் தொந் தரவு செய்துகொண்டே யிருந்தான். நான் அவனை வெறுத்து ஒதுக்கினேன். நேற்று நான் தனியே யிருந்தேன்; திடீரென்று வந்து, என் கையைப் பிடித்தான்; அடா தன சொன்னன்; இணங்கா விட்டால் குத்தி விடுவதாக மிரட்டினன். நான் தைரியமாக அவனுடைய வாளைப் பிடுங்கிக் குத்தப் போனேன்; ஆள் ஓடிப்போனன்.

இனி, அவன் இந்த வீட்டில் இருப்பதே கூடாது!'' என்று சொல்லிக் கண்ணிலிருந்து கொஞ்சம் நீர்வடித்தால், உண்மை உன் பக்கம் திரும்பிவிடுகிறது. அப்பன் கோபம் அவன்மேற் பாயும்; அவன் ஒழிந்து போவான்; நீ நன்ருயிருக்கலாம்.

பேதுரி: ஐயோ, அப்பாவி! அவன் மேலா இந்தப் பழி சுமத்துவது? பாபம்!

ஏநோன்: சை, சும்மா இரு! பாபமாம், புண்ணியமாம்! நான் போய் உன் கணவருடன் பேசி, அவர் சின வெறியை அவன் மேல் தூண்டி விடுகிறேன்.

பேதுரி: அப்படியானல் உடனே போ........... உன்னலேதான் அவனைக் கண்டேன்; அவமானப் பட்டேன்; உன்ருல் என் மானம் தக்கட்டும்.

ஏநோன் சென்ருள்.

IX

தேஸே வந்து சேர்ந்தான். 'கண்ணே' என்று மனைவியை அணையப் போனன். "நாதா நான் பாவி! தங்கள் அன்பிற்குத் தகுந்தவளல்லள்; என்னைத் தீண்ட வேண்டா! தங்கள்முன் நிற்க வெட்கமா யிருக்கிறது; நான், மறைந்திருப்பதே நலம்'' என்று பேதுரி உள்ளே ஓடுகிருள்.

தேஸே திகைத்து நிற்கையில், ஹிப்போலேத் வருகிருன்!

தேஸே: மகனே, உனது தந்தைக்கு உன் தாய் பேதுரியிடம் ஏன் இவ்வளவு மனமற்ற வரவேற்புக் கிடைத்தது?

ஹிப்போலேத்: எந்தையே, அவளை மறந்துவிடுங்கள்; இனி நான் அவளைப் பாராதிருக்க வழி செய்யுங்கள்! அவளிருக்குமிடத்தில் இனி நான் இருக்க முடியாது; இதோ செல்கிறேன்.

தேஸே: ஏன்? மகனே!

ஹிப்போலேத்: ஆம், நான் தங்கள் உண்மை மகன் என்பதை உலகம் அறியட்டும்! தந்தையே, நான் என் அன்னையைத் தேடிச் செல்கிறேன். இந்த வீடு எனக்குப் புளித்தது; அரசும் புளித்தது.

தேஸே: ஆ, இடர் கடந்து வந்தேன்; இடரில் கால் வைத்தேன்! இங்கும் துன்பமா? இவன் இப்படிப் பேசுவானேன்? அவள் அப்படி நோவானேன்? மகனே, என் அறைக்கு வா; மனதை விட்டுப் பேசு! உண்மையறிகிறேன்.

தேஸே தனியறை யொன்றினுட் செல்கிருன்.

X

தேஸே தனித்திருந்தான். ஹிப்போலேத் வருமுன்பே, அவன் மனதைக் கலக்கப் புகுந்தாள் ஏநோன். திடீரென்று அவன் காலில் விழுந்து, தொழுது, அழுது, பாசாங்கு வித்தையெல்லாம் காட்டி அவள் முறையிட்டாள் :

"அரசே, இந்தப் பாவி ஹிப்போலேத் செய்ததைக் கேளுங்கள்: படுபாவி; அவனை நம்பவே கூடாது! அவன் குடித்தனத்தில் இருக்க லாயக்கில்லை; தடிப் பிரமசாரி! நீங்களும் ஊரிலில்லை. அவன் நமது அரசியைக் கைவலை போட்டான்; கெடுக்கத் துணிந்தான்; கையைப் பிடித்திழுக்கப் போனான். பதிவிரதையான பேதுரி, அவனை மறுத்தாள்: "நான் தாய், நீ மகன்; என்னிடமா இந்த வார்த்தை பேசுகிறாய்?" என்று உபதேசித்தாள்; முரட்டுத் தடியன், வாளைக் காட்டி மிரட்டினான்; பேதுரி தைரியமாக அவன் வாளையே பறித்து, "போகிறாயா, குத்தட்டுமா?" என்று சினந்தாள். ஆள் பயந் தோடிப்போனான். நான் வந்து பேதுரியைக் காத்தேன். நானில்லாவிட்டால், அவள் மானம் போயிருக்கும். அரசே இப்படிப் பட்டவனா பிள்ளை? இவனை வீட்டில் வைத்திருக்கலாமா? நாட்டிலேதான் வைத்திருக்கலாமா?"

இப்படிப் புளுகேற்றி நீலிக் கண்ணீர் வடித்த ஏனோனே, அரசன் நம்பி விட்டான். ஆணின் உண்மையைவிடப் பெண்ணின் கண்ணீருக்கு அதிக பலமிருந்தது!

தேஸே: ஹா, அப்படியா செய்தி? நான் தகப்பன்! எனக்கா இந்தத் துரோகம் செய்தான்? ஹா! என் மனேவியையா? இந்த வாளே, அவன் செய்த நன்மைக்கே அளித்தேன்; அதைக் கொண்டு தீமை செய்யவோ துணிந்தான்?

ஏநோன்: அதை ஏன் சொல்கிறீர்கள்? அவன் பண்ணும் அக்கிரமத்தைச் சொல்ல வாயில்லே; நானிருந்து பேதுரியைக் காத்தேன். அவள் மனம் உடைந்து அழுகிருள். இதோ நான் அவளேத் தேற்றச் செல்கிறேன்!

ஏநோன் சென்ருள். ஹிப்போலேத் வந்தான். அவனேப் பார்த்ததுமே தேஸே பல்லேக் கடிக்கிருன்.

ஹிப்போலேத்: தந்தையே, தங்கள் முகத்தைச் சினமேகம் கவர்ந்ததேன்?

தேஸே: அயோக்கியப் பயலே! என் முன் வராதே! உன் போக்கிரித் தனத்தை உன் அப்பன் படுக்கைவரையில் கொண்டு

போகத் துணிந்தாயா? என் முன்னே நின்றால் கொலை விழும்! ஓடிப்போ துஷ்டா! இனி, என் அரசில் தலை காட்டக் கூடாது! கடல் தேவதையே, வஞ்சந் தீர்; இவனை அப்படியே விழுங்கி விடு!

ஹிப்போலேத்: தந்தையே, என்மேல் ஏன் இந்த வீண் பழி? பேதுரி தன் குற்றத்தை என் மேல் சுமத்துகிறாள்; அவளே என்னைப் பலாத்காரம் செய்தாள்; நான் மறுத்துத் தப்பிக் கொண்டேன்!

தேஸே: பொய், பொய்! உன் வாள், அவள் கையிலிருந்து உன்னைத் துரத்தியது. மகன் என்று நம்பினதற்கு இந்த வேலையா செய்தாய்? போ, போ!

ஹிப்போலேத்: தந்தையே, அவள் தன் செயலுக்காகத் தற்கொலை புரிந்துகொள்ளவே என் வாளைப் பறித்தாள். நான் உம் மகன்; என் தாயார் உத்தமி; அவள் பெயரும் தங்கள் பெயரும் கெடும்படி நான் யாதும் செய்ததில்லை. எனது மாசற்ற வாழ்வை உலகறியும்; நான் காதலித்தது ஒருத்தியையே; அவள் அரிஸி!

தேஸே: அட துஷ்டா, எனது நேர் விரோதியையோ காதலித்தாய்? இங்கே என் மனைவியிடம் உன் கொழுப்பைக் காட்டி

ளுய்; அங்கே என் விரோதியை விரும்பி ளுய்....உன்னை இரு மடங்கு வெறுக்கி றேன். போ....உடனே....!

ஹிப்போலேத்: தந்தையே, தங்கள் மனைவி செய்த குற்றத்தை அறியாமல், என் மேல் சீறி விழுகிறீர்; பிறகு உண்மை யறிவீர். நான் இதோ போயொழிகிறேன். உண்மை வெளிப்படட்டும்!

தேஸே: தொலை, துஷ்டப் பதரே! கடலே, அவனை விழுங்கு!

ஹிப்போலேத் நேராக அரிஸியிடம் ஓடி ஞன்; அதைக் கண்ட பேதுரி ஓடிவந்து, "நாதா அந்தப்பாவி அரிஸியையும் கெடுக்கப் போகிருன். உடனே ஓடுங்கள்! 'இவனை நம்ப வேண்டா!'மென்று அவளிடம் சொல்லுங் கள்!" என்று தூண்டினுள்.

தேஸேயும் உடனே ஓடினுன்.

பேதுரிக்கு அழகான இளம் அரிஸியைக் கண்டால் பொருமை; அவளை வெட்டி யெறிய இவள் மனம் கொதிக்கும். தான் காதலிக்கும் ஹிப்போலேத் அவளைக் காதலித்தது, அவ ளுடைய பொருமைத் தீயை அதிகமாக்கியது.

XI

ஹிப்போலேத்தும் அரிஸியும் பேசுகின்றனர் :

ஹிப்போலேத் : அரிஸி, தந்தை என்னை நாடு கடத்தினர். பேதுரி, என் மேல் பழி போட்டாள். புறப்படு, கப்பல் தயார்!

அரிஸி : நாதா, அரிஸி தங்களிடமே உயிர் வைத்திருக்கிருள்; ஆனல், அந்தப் பேதுரி சுமத்திய பொய்ப் பழியைத் துடைக்காமலா போவது? மேலும், நான் கன்னியாகத் தங்களுடன் சென்ருல் 'பொல்லாதவள் ஓடிப் போனுள்' என்று நாடு பழிக்குமே....!

ஹிப்போலேத் : கவலை யொழி! அரிஸி, என் உண்மையைத் தந்தை அறிந்து கொள்வார்; பொய் நிலைக்காது. வா, உன் கணவனுடன்! இங்கே திருமணம் நடந்தால் பகைவர் கொடுமை செய்வர். என் தந்தையே எதிர்ப்பார்! என் முன்னோர் வணங்கிய கோயிலில் மணவினைக்குத் தயார் செய்திருக்கிறேன். தேவதைகளே நமது திருமணத்தை நடத்தி வைப்பர்; புறப்படு; கலங்காதே!

அரிஸி : அப்படியானல் இதோ வருகிறேன்!

அரிஸி புறப்பட்டாள். அதே சமயம்

தேஸே ஓடிவந்தான்; ஹிப்போலேத் ஓடி மறைந்தான்.

தேஸே : அரிஸீ, மோசம் போகாதே; இந்தத் தூர்த்தனைக் காதலிக்காதே! இவன் உன்னைக் கைவிட்டு வேறொருத்தியிடம் மனத்தைத் திருப்புவான்; இவன் பாசாங்கை நம்பாதே! இவன் எனக்குப் பெரிய அவமானத்தை உண்டுபண்ணிவிட்டான்.

அரிஸி : ஐய, மாசற்ற ஹிப்போலேத்தையோ இப்படிச் சொல்லுகிறீர்? அவரை அறியாது பேசுகிறீர்! ஏதோ வன்மங்கொண்டு, என்முன் இப்படிப் பிதற்றினீர். ஐய, ஹிப்போலேத் என் தெய்வம்! அவர் உள்ளம் மாசற்றது. தாங்கள் அவரை வெறுத்தாலும், அவர் தங்களை வெறுக்கவில்லை. உலகியல்பை அறிந்து அவர் நாட்டைவிட்டோடுகிறார். இதோ நானும் அவருடன் செல்கிறேன்!

அரிஸி ஓடி மறைந்தாள்.

தேஸே தலை சுழன்றது: "ஆ என்னவோ செய்கிறதே; உண்மை தெரியவில்லையே!" என்று மறுபடியும் விஷயத்தை யறிய முயன்றான்.

XII

பேதுரி மரணவேதனைப் பட்டாள்: "ஐயோ அவனாசை என்னை எரிக்கிறதே; அவன் அரிஸியைக் காதலிக்கிறான்: என்னை மறுக்கிறான். இதைக் கண்டு மனம் வேகிறதே! வெளிக்குக் கணவனிடம் பாசாங்கு பண்ணுகிறேன். நான் எங்கே ஓடிப்போவது? என்னை மனமே கொல்லுகிறதே!" என்று புலம்பினாள். பின், தன்னை ஹிப்போலேத்திற்கு எதிராகத் தூண்டிவிட்ட ஏனோனைப் பழித்தாள்; விரட்டி யடித்தாள். ஏனோன், கடலில் விழுந்து செத்தாள். படுக்கையில் சோர்ந்து சாய்ந்து பேதுரி விம்மினாள்; கண்ணீர் விட்டாள்; குழந்தைகள்மீது எரிந்து விழுந்து தள்ளினாள். பானேவ் என்ற தோழி இவற்றையெல்லாம் மன்னனிடம் சொன்னாள். மன்னன் ஓடிவந்தான். வழியில் தெரமேன் வந்து, "ஹிப்போலேத் கடலில் மூழ்கினான்; அவனுடன் சென்ற அரிஸி திரும்பிவந்தாள். அரசே, குற்றம் பேதுரிமேல்; அவளே அவனைக் காம வெறியுடன் அணுகினாள். என் நண்பன் மாசற்றவன்" என்று உண்மையைக் கூறினான். தேஸே, "ஹா, மகனே! உன்னை அநியாயமாகக் கொன்றேனே!" என்று அலறி, வருந்தி பேதுரியிடம் ஓடினான்.

பேதுரி, "நாதா, நானே பாவி; குற்றம் என் மேல்; அவன் என்னைக் கண்ணெடுத்தும்

பார்க்கவில்லை. நானே அவனைக் காமவிழிகளாற் கண்டேன்; கெடுக்க முயன்றேன். என் வினை என்னைக் கொல்கிறது. நான் என் பாபச் சுமையை ஒழிக்க நஞ்சுண்டேன்; நஞ்சே, வஞ்சநீர்! பாபம் என்னைக்கொன்.... ஹா, ஹிப்போலேத்........" என்று இறந்தாள்.

தேஸே, "ஹிப்போலேத் ஹிப்போலேத்!" என்று கதறினன்; அவன் பெயரைப் பெருமைப் படுத்தினன்.

2. பூசாரி செய்த புரட்சி (Athalie)

1

பழைய யூத மன்னர் வரலாறு பெரும்பாலும் எருசலக் கோயிலைச் சுற்றியே அமைந்திருக்கும். யூதியா மன்னர் ஆட்சியிலிருந்த எருசலக் கோயிற் கட்டிடம், தாவீது மன்னனால் தொடங்கப் பெற்று, சாலமன் என்னும் இராஜரிஷியால் ஏழாண்டுகளில் எழுப்பப் பெற்றது. சாலமன் பெரிய அறிவாளி; நீதிமான். அவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த பிள்ளை, ரோபாம் என்பவனோ, அப்பனுக்கு நேர் எதிரிடையான அகங்காரப்புலி; பெருமுரடன்; குடிகளின் மனத்தை நன்றாக அறிந்தவன்; ஆனால், அதற்கு எதிராகவே நடப்பவன்; ஏன்? தான் இ........ரா........ஜன் அல்லனோ? 'ஐயோ, வரி தாங்க முடியவில்லையே!' என்று குடிகள் அலறினால், 'போடு இன்னொரு நடைவரி' என்று சுமையேற்றிக் குடிகளை நசுக்குவான். 'யாராயினும் இஃதென்ன அநியாயம்?'' என்றால், 'வை கழுத்தில் கத்தி; தொலை ஆளை!' என்று குடிவெறிப்

படைகளை ஏவுவான். குடிவெறியும் கொடுங்கோலும் எவ்வளவு காலம் துள்ள முடியும்?

யூத நாட்டார் பன்னிரண்டு வகுப்பினர்: அவர்களிற் பத்து வகுப்பினர் புரட்சி செய்து, இஸ்ரேல் என்றொரு தனியரசை நாட்டி எருசலக் கட்டுப்பாட்டுக்கு நேர் எதிரிடையாக நடந்துவந்தனர்: எருசலக் கோயிலில் 'குடிக்கக் கூடாது, பாடக் கூடாது' என்றால், 'உங்கள் வறட்டுச் சாமியைத் தூரத் தள்ளுங்கள்! எங்கள் பால் (Baal) சாமிக்கு இவைதான் பிரியம்' என்று குடிப்பர், களிப்பர், மாதருடன் கூத்தாடுவர். இந்தப் பால் சாமியின் பஞ்சமகாரக் கூத்து, முகம்மது நபியின் காலத்திலேதான் சிறிது அடங்கியது.

இந்த இஸ்ரேல் மன்னருள் ஒருவன் ஆஷாப் என்பவன். அவன் தன்னிகரிலாத் தனிக்காட்டரசன்; அவன் மனைவி யஸபிலி, புலிமாதிரிதான். இரக்கம், ஈகை, கருணை என்னும் பேச்சே இவர்களுக்குக் கூடாது. இவர்கள் முகத்தில் புன்னகை யில்லாவிட்டாலும், இவர்கள் பிடித்த கொலைவாள் இரத்த நகை புரிந்து கொண்டே யிருக்கும். இவர்களுடைய கொடுமை தாங்காமல், புரட்சிக்காரர் சதி செய்து, ஆஷாபை அம்பினாற் கொன்றனர். யஸபிலியை ஒரு கோபுரத்திலிருந்து கீழே தள்ளிக் குதிரைகளை விட்டு மிதிக்கச் சொல்லி,

அவள் தசையைத் துவையலாக்கி, நாய்க்குப் போட்டனர்.

2

இந்த யஸபிலியின் மகள்தான் அத்தாலி; தாய் இராட்சஸி; மகள் படு ராட்சஸி! யூதியா விற்கும் இஸ்ரேலுக்கும் பெரும்பகை, போட்டி வலுத்தன. யாரும் அவர்கள் பகையைப் பஞ்சா யத்துக் கூடித் தீர்த்து வைக்க முடியவில்லை; முடிவில், மன்மதன் கிளம்பினான். இப்போது யூதியாவை ஆண்ட மன்னன் முன் சொன்ன ரோபாமின் பேரன், ஜோரன். பெயருக்குத் தக்க படியே ஆள் 'ஜோரா' யிருப்பான். இவன் ஒரு நாள் இஸ்ரேலில், நண்பரொருவர் நடத்தியவிருந் திற்குப் போனான். அந்த விருந்தில் அத்தாலி இவனெதிரே உட்கார்ந்து, கண்வலை வீசினாள். மன்மதனும் ஐங்கணையை நன்றாகத் தீட்டி இரு வர் மனத்திலும் பாய்ச்சினான். இருவருக்கும் திருமணம் நிறைவேறியது. யூதருக்கு மோசே வைத்தது சட்டம் என்றால், ஜோரனுக்கு அத்தாலி வைத்ததே சட்டம்! அத்தாலி நல்ல அழகி: 'முத்துப்பல், பவளவாய், மலர்விழி, மதிமுகம், வேய்த்தோள், குட மார்பு' என்றெல் லாம் கவிகள் பிரமாதமாகச் சாயம் அடித்துப் பெண்களை வர்ணிக்கிறார்களல்லரோ? அந்த வர்ணனைகள் அத்தனையும் அத்தாலிக்குத் தகும்! வெளி மினுக்கெல்லாம் மிகவுஞ் சரி;

குணந்தான் கொள்ளிக்கட்டை! ‘அழகான இராட்சஸி, படுகொலைப் பேய்!’ என்றே அவளைச் சொல்ல வேண்டும்.

அத்தாலிக்கு, தாவீதின் வம்சம் என்றால் கண் சிவக்கும்; எருசலம் என்றால் வாய் கசக்கும்; மோசேயின் தரும சாத்திரத்தைக் கண்டால் முகஞ் சுளிக்கும். இந்த மூன்றையும் ஒழிக்கவே பால் சாமியின் அருளால் தான் அவதரித்திருப்பதாக அவள் எண்ணம். தேனில் விழுந்த ஈப்போல், அவள் அழகிலும் மினுக்கிலும் மயங்கிக் கிடந்த ஜோரன், அவள் பின்னே சென்று பால் சாமியைத் தொழுது வந்தான்; அரச பாரத்தை அறவே மறந்து, அரிவை மோகத்திலேயே ஆழ்ந்தான்; முடிவில் பகைவர் கையிற்பட்டு வெட்டுண் டிறந்தான். அவனுக்கும் அத்தாலிக்கும் பிறந்த மக்கள் பலர். அம் மக்களையும் பகைவர் கொன்றனர். ஒரே ஒரு பிள்ளைதான் மிஞ்சினன்; அவன் பெயர் **ஓக்காசன்.**

3

ஓக்காசன் தந்தையின் அரியணையில் ஏறினன். தன் மகன் பட்டங்கட்டிக் கொண்ட சந்தோஷம் ஒருபுற மிருந்தாலும், மீண்டும் இந்தத் தாவீது வமிசம் தளிர்த்ததே என்ற விசனம் அத்தாலியைப் பற்றிக்கொண்டது. ஒக்காசனுக்குப் பிள்ளைகள் பிறக்கப் பிறக்க, அத்தா

லிக்கு நாடி தளர்ந்துவந்தது. பேரப் பிள்ளைக ளைக் கண்டால் பாட்டிக்கு ஆனந்தமா யிருக்க வேண்டுமன்றோ? அத்தாலியோ தன் பேரப் பிள்ளைகளை யெல்லாம் தாவீது மரபின் பாம்புக் குட்டிகளென்று கருதினாள். ஒருநாள் ஒக்காசன் இஸ்ரேல் மன்னன் விருந்திற்குப் போனான். அங்கே சதியாளர் கூடி, ஒக்காசனை ஓசைப்படா மல் ஒழித்துப் புதைத்தனர். அத்தாலி உடனே தன்னை யூதியா, இஸ்ரேல் இரண்டிற்கும் இராணி யென்று விளம்பரம் செய்து கொண் டாள். ஆனால், பொதுஜனங்கள் அவளை ஏற் றுக் கொள்ளவில்லை. "ஒக்காசன் மைந்தர் அத்தனை பேர் இருக்கையில், நீ என்ன எம்மை யாளுவது?" என்று எதிர்த்தனர். எதிர்த்த வர்களை அவள் சிறையிட்டாள். அவள் பேரப் பிள்ளைகளான பட்டத்திற்குரிய ஒக்காச மைந் தர் வெளிப்படையாகக் கொலைவாளுக்கு இரை யாயினர்.

ஊரெல்லாம் இந்தக் கொடுமையைச் சகிக்க மாட்டாமல் அலறித் தவித்தது. 'தாவீதின் மரபு அழிந்ததே! அந்த மரபிலே தான் நமது இரட்சகர் அவதரிக்கப் போவதாகச் சாத்திரங் கள் கூறுகின்றன. அந்த நம்பிக்கை பொய்த் ததே!' என்று சாதுக்கள் மனங் கலங்கினர். அரண்மனை வாசலில் பிணமலைகளுக்கிடையே அரசிளங் குமரர் வெட்டுண்டு கிடந்தனர்.

அத்தாலி கண் குளிரப் பார்த்து, 'இனி, தாவீது வமிசம் ஒழிந்தது ; நமது கொடுங்கோல் இனி அசையாது' என்று மகிழ்ந்து பால் சாமிக்கு அமோகமாகத் திருவிழா நடத்தினுள்.

அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு, ஒரு பெண்மணி விம்மி விம்மி யழுது கொண்டு, இள வரசர் பிணக் குவியலைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் குவிய லில் ஒரு சிறு குழந்தை தொண்டைக்கும் நெஞ் சிற்கும் இழுத்துக் கொண்டிருந்தது. சட் டென்று குழந்தையை எடுத்து முத்தமிட்டுப் பால் கொடுத்தாள், அப்பெண். குழந்தைக்குச் சிறிது தெளிவு வந்தது; அதைத் தன் வீட் டிற்கு மறைவாக எடுத்துச் சென்ருள். இதை யாரும் கவனிக்கவில்லை.

4

அந்தப் பெண்மணிதான் எருசலம் கோயி லின் தலைமைப் பூசாரியான யோதானின் உத்தம மனைவி யசோபை. அந்தக் குழந்தை தான் அவளாற் காப்பாற்றப் பெற்ற யோவான் ; ஒக்காசனின் ஒரு வயதுக் குழந்தை; பட்டத்திற் குரியவன். இந்தச் செய்தி காற்று வாக்கில் வந்து காதில் விழுந்தாலும், அத்தாலி நெருப் பாய்க் கிளம்பி, எருசலக் கோயிலை யிடித்து, அதன் கல்லால் பூசாரிகளின் மண்டைகளை

உடைத்தெறிந்து விடுவாள். என்ன செய்வது? பூசாரி அஞ்சவில்லை; "எப்படியாவது பிள்ளையைக் காப்பாற்றி, இந்த அத்தாலி நீலியை ஒழித்து, இப் பிள்ளைக்குப் பட்டஞ் சூட்டித் தாவீது மரபை வாழ வைக்கிறேன்" என்று உறுதி கொண்டான். குழந்தையின் பெயரை **எல்லேசன்** என்று மாற்றி அவனை எருசலம் கோயிலுக்குள் இரகசியமாக வைத்து வளர்த்து வந்தான்.

எருசலம் கோயில் பூசாரிகள் மிகப் பலர். அவர்கள் முறைப்படி கோயில் வழிபாட்டைச் செய்து வந்தனர். ஆனல், தலைமைப் பூசாரி தான் மூலஸ்தானத்திற்குப் போகலாம். ஆதலால் யோதானைத் தவிர வேறு யாரும் மூலஸ்தானத்தை எட்டிப்பார்க்க முடியாது; எல்லாரும் வெளியே யிருந்துதான் தொழ வேண்டும். மூலஸ்தானத்தில் பரம்பரையாகத் தாவீது காலத்தினின்று வந்த தங்க விளக்கு, மோசேயின் தரும சாத்திரம் எழுதிய பலகை—இரண்டும் இருந்தன. யூதியாவிற்கு மன்னராக வருபவர் அந்தப் பலகையிலுள்ள தரும விதிகளைப் பல முறை எழுதிப் பாடம் பண்ணி, அவற்றைப் பின்பற்றி அரசாளுவதாக வாக்களிக்க வேண்டும்.

தலைமைப் பூசாரி யோதான் குழந்தை யோவானை, மூலஸ்தானத்தில் வைத்துக் கண்

ணுங் கருத்துமாக, மறைவாக வளர்த்தான். குழந்தைக்கு ஐந்து வயதானதும், எழுத்துக் கற்பித்து, யூத தருமத்தையும் புகட்டினன். யோவான் அற்புதப் புலமை காட்டினன்; வெகு எளிதில் பூசாரியின் பாடங்களைக் கற்ருன்; மனங்குவிந்து எப்போதும் இறைவனையே தொழுதுநின்ருன். வழிபாடுகளில் பூசாரிக்குச் சிறிது உதவிசெய்வதைத் தவிர வேறு வேலை அவனுக்கில்லை; பூசாரியே தன் தந்தை, யசோபையே தாய் என்று நினைத்திருந்தான்; பூசாரியின் இரண்டு குழந்தைகளுடனும் உடன்பிறந்தான் மாதிரியே பழகினன். அவனுக்கு ஏழு வயதாயிற்று. எட்டாவது வயதில் யூதர் தம் இளவரசனைத் தேர்ந்தெடுத்து ஒரு திருவிழா நடத்துவது வழக்கம்.

5

இதற்குள் அத்தாலியின் அட்டகாசமும், அழுலும், கொடுமையும் அளவிற்கு மிஞ்சிப் போயின. தாவீது மரபின் வேரை யறுத்தெறிந்த பின், அவன் கட்டிய எருசலக் கோயிலைத் தகர்த்து, யூதர்கள் எல்லாரையும் தனது இஷ்ட தெய்வமான பாலின் அடியாராக்க வேண்டுமென்று அவள் முனைந்தாள்; பால் வணக்கம் செய்யப் பெரிய கோயிலொன்று கட்டினள். அங்கே தாராளமாக எல்லாரும்

குடித்துக் களித்து, ஆண் பெண் வேறுபாடின்றி நடனமாடச் செய்தாள். விஷய சுகங்களில் மாந்தர் மனம் எளிதில் ஈடுபடுமாகையால், ஏராளமான ஜனங்கள் அவள் பக்கமே சேர்ந்து அவளுடைய உதாரணத்தை மேற்கொண்டனர். எருசலக் கோயிலின் அன்பர் சிலரும் அந்த மயக்கத்தில் ஈடுபட்டனர். அவர்களில் ஒருவன் மத்தன் என்பவன். கோள், பொய், பொருமை, வஞ்சம், சூது எல்லாம் ஒன்று சேர்ந்த இந்த மகானுபாவனை அத்தாலி பால் வழிபாட்டிற்குப் பூசாரியாக நியமித்தாள். அவனே அவளுக்கு மந்திரியுமானுன்; இருவருக்கும் உள்ளுறவு அதிகம். மத்தன், யோதானின் ஜன்ம விரோதி. யோதானைப் பற்றி நாளைக்கு ஒரு பொய்ப் பழி சுமத்தா விட்டால் அவனுக்குத் தூக்கம் வராது. அத்தாலிக்கு அவன் புளுகே வேதவாக்கு. அத்தாலிக்கும், எருசலக் கோயிலின் பூசாரி யோதான் ஏதோ சதியாலோசனை செய்வதாக மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. ‘அந்தப் பூசாரி பொல்லாதவன், அபாயமானவன், உனதுயிருக்கும், அரசிற்கும் உலை வைக்கப் பெரிய சேனையும், ஏராளமான ஆயுதங்களும் சேர்த்து வைத்திருக்கிருன். உனது அரியணையைப் பிடுங்கிக் கொள்ள ஒரு வாரிசையும் கண்டு பிடித்திருக்கிருன். கோயிலில் நடப்பது பூசையன்று; புரட்சி, புரட்சி! நாளையே அந்தக் கோயிலை

இடித்து, அந்தப் பூசாரிக் கும்பலை யழிக்கா விட்டால் உனக்கு ஆபத்துத்தான்!' என்று அக்கொடிய மத்தன் பயமுறுத்தி விட்டான்.

அத்தாலிக்குப் பிடித்தது திகில்! எருசலக் கோயிலில் யார் நுழைந்தாலும் சதிக் கூட்டத்தைச் சேர்ந்தவரென்று அவரைத் தண்டிக்கத் தலைப்பட்டாள்; கொலைப்படைகளுக்குப் பலமான ஊட்டமும் ஊதியமுந் தந்தாள்; தன் சேனாதிபதிக்குக் கண்டிப்பான கட்டளையிட்டு, எந்த நிமிஷமும் இருபதினாயிரம் வாள் வீரர் தயாராயிருக்கும்படி செய்தாள். மேலும், பூசாரி ஏராளமான பொருளைக் கோயிலிற் புதைத்திருப்பதாகவும் அறிந்தாள் அத்தாலி; அதையும் கொள்ளையிடத் தீர்மானித்தாள்; தன் காரியத்தை எருசலம் கோயிலில் நடக்கும் ஆண்டு விழாவில் நிறைவேற்றுவதென்று முடிவுசெய்தாள்; கோயிலைச் சுற்றித் தன் ஒற்றரை நிறுத்தினாள்.

எருசலத்தில் தன் பகைவன் ஒளிந்திருக்கிறான் என்று திகிலுடன் நினைத்து நினைத்து, அத்தாலி உறக்கமற்றுக் கனவுகள் கண்டாள். தன் தாய் கனவில் வந்து, "என்னைக் கொன்றது போலவே, இவர்கள் உன்னையும் கொல்லப் போகிறார்கள். உனது பகைவன், எட்டு வயதுச் சிறுவன்; எருசலம் கோயிலுக்குள் ஒளிந்திருக்கிறான்" என்று சொல்லி

மறைந்தாளாம்! கனவில் அந்தப் பையனையே அடிக்கடி கண்டாள் அத்தாலி. பூசாரி, பையன்—இரண்டு பேரையும் நினைத்தால் அத்தாலிக்குத் தூக்கிவாரிப் போடும். போதாக் குறைக்கு மத்தன், 'இது பொல்லாத கனவம்மா! அந்தப் பையன் எருசலக் கோயிலில் இருக்கிறான்; பார்க்கலாம்' என்று தூண்டி விட்டான். மறுநாளே அத்தாலி பெரிய சேனையுடன் எருசலக் கோயிலுட் சென்று பையனைப் பார்த்தாள்.

6

மகா பாதகியின் முன் நின்றான் பிஞ்சிளங் குழந்தை யோவான். எங்கே குழந்தை வாய் தவறி ஏதாயினும் சொல்லிவிடப் போகிறானே என்று பூசாரி கவலைப்பட்டான். அத்தாலி பூசாரியைப் பார்த்துக் கம்பீரமாகக் கேட்டாள் :

அத்தாலி : இந்தப் பையன் தங்கள் குழந்தையா ?

பூசாரி : அவன் எனது அன்புக் குழந்தை; இறைவன் அருட் குழந்தை!

அத்தாலி : குழந்தாய், உன் பெயர் என்ன ?

பூசாரி : எல்லேசன் என்று அவனைக் கூப்பிடுகிறோம்.

அத்தாலி : நான் உம்மைக் கேட்கவில்லை; பையனைக் கேட்கிறேன். பையா உன் அப்பா யார்?

பையன் : என் அப்பா ஆண்டவன்; அவன் இந்தப் பெரியார்மூலம் என்னை வளர்த்தான்.

அத்தாலி : பையா, நீ எவ்வளவு காலமாக இந்தக் கோயிலுக்குள் இருக்கிறாய்?

பையன் : பிறந்ததுமுதல் இங்கே தான் இருக்கிறேன்; வேறு இடம் எனக்குத் தெரியாது.

அத்தாலி : உன் ஊர் எது?

பையன் : இந்தக் கோயிலிலுள்ள இறைவன் திருவடியே என் ஊர்.

அத்தாலி : யார் உன்னை இங்கே அழைத்து வந்தது?

பையன் : இறைவ னிச்சையும், இந்தப் பெரியார்களின் அன்பும்.

அத்தாலி : உன்னை யார் பாதுகாத்தார்கள்?

பையன் : பட்சிகளையும், விலங்குகளையும் காக்கும் இறைவனே, அடியேனை இந்தப் பெரியார்கள்மூலம் பாதுகாத்தான், பாதுகாக்கிறான், பாதுகாப்பான்!

அத்தாலி : நீ இங்கென்ன செய்கிறாய் ?

பையன் : இறைவனைத் தொழுகிறேன் ; அவனறத்தைப் படிக்கிறேன் ; எழுதுகிறேன் ; இப் பெரியாருக்கு வேண்டிய சிறு பணிகளைச் செய்கிறேன்.

அத்தாலி : உனது இறைவனறம் என்ன சொல்லுகிறது ?

பையன் : "எல்லாருக்கும் அன்பாய் இருக்க வேண்டும். கடவுளை நம்பினவர் கைவிடப் படார். கடவுளே உயிர்களுக்குத் தந்தை. அவனே அநாத ரட்சகன். அவன் எங்கும் இருக்கிறான். ஆதலால் பொய், கோள், வஞ்சகம், பொறாமை, சினம், செருக்கு, கொலை முதலிய பாவங்களைச் செய்யாமல், அவனையே நினைத்துச் சுத்தமாயிருக்கவேண்டும்" என்று சொல்லுகின்றது.

அத்தாலி : நீ புத்திசாலியா யிருக்கிறாய். என் கண்மணி, என்னுடன் வா ! எனக்குப் பிள்ளை யில்லை. நீ என் பிள்ளைபோலிருக்கலாம். உனக்கு வேண்டிய தெல்லாம் தருகிறேன்.

பையன் : எனக்கு வேண்டிய தெல்லாம் இறைவன் அருளே !

அத்தாலி : எனக்கும் இறைவனெருவன் இருக்கிருன். சந்தோஷமான பால் சாமி; அவனைக் கும்பிடலாம் ; வா !

பையன் : உன் சாமிக் கூத்து எனக்குப் பிடிக்க வில்லை. இங்கே இருப்பதே உண்மைச் சாமி.

அத்தாலி : உன் வறட்டுச் சாமியிடம் என்ன இருக்கிறது? என் அரண்மனைக்கு வந்தால் பாட்டுக் கேட்கலாம் ; நடனம் பார்க்கலாம் ; விருந்து சாப்பிடலாம் ; களிக்கலாம் !

பையன் : இந்தக் களிப்பெல்லாம் எனக்குப் புளிப்பு.

அத்தாலி : குழந்தாய், எனது வாரிசாய் இரு, வா ! உன்னைப் பார்த்தால் பிரியமா யிருக்கிறது. நீ புத்திசாலி ; என்னுடன் வா !

பையன் : நான் உன்னுடன் வர மாட்டேன் ; இதோ இந்த அப்பாவுடனேயே யிருப்பேன்.

7

அத்தாலி உண்மையாகவே பையனை நேசித்தாள் ; மத்தனிடம் தான் கண்ட காட்சியைச் சொன்னுள். "ஐயையோ குடி கெட்டது ; உன்னைக் கொல்லப் போகும் படுபாவி

யைச் சும்மா விட்டா வந்தாய்? அவன் எல்லேசன் அல்லன், எமேசன்!'' என்று தூண்டி விட்டான் மத்தன்.

மறுநாள் திருவிழா. 'எருசலம் கோயிலுக்குள் யாரும் போகக் கூடாது!' என்று உத்தரவு போட்டாள் அத்தாலி. சேனதிபதியை அழைத்து, "நாளைப் பூசைக்கு அவர்கள் மணி யடித்த வுடனே, கோயிலை வளைத்துக்கொள்ள வேண்டியது. நான் எனது கையாலேயே அந்தப் பூசாரியையும், பையனையும் வெட்டித் தள்ளுவேன். என் உதவிக்குத் தயாரா யிருங்கள்! கோயிலை நாளை இடிக்க வேண்டியது; அங்குப் புதைக்கப்பட்டுள்ள பொருளைக் கொள்ளை யடித்து என்னிடம் கொண்டுவர வேண்டியது; பூசாரிக் கும்பல்களை அங்கேயே வெட்டிப் புதைக்கவேண்டியது. கவனம்!'' என்று உத்தரவிட்டாள் இராட்சஸி.

சேனதிபதி இரக்க முள்ளவன்; நேர்மை யானவன்; அத்தாலியின் அக்கிரமங்களைப் பொறுக்காதவன்; எருசலம் கடவுளை உண்மை யாக நேசிப்பவன்; தாவீது மரபைக் காக்க உள்ளந் துடிப்பவன்; பூசாரியின் நண்பன்.

மறுநாள் அதிகாலை சேனதிபதி பூசாரி யிடம் வந்து செய்தியைச் சொல்லித் தப்பி யோடும்படி வற்புறுத்தினன்.

பூசாரி: நண்பரே, அந்தக் கொடியவளிடம் சேனாதிபதியா யிருக்கத் தங்கள் உள்ளம் சம்மதிக்கிறதா?

சேனாதிபதி: இல்லை; என்ன செய்வது? தாவீதின் சந்ததிகளை யெல்லாம் கொன்று போட்டாளே இவள்!

பூசாரி: தாவீதின் சந்ததி அழியாது; அஃது இறைவன் குடும்பம் என்பதை யறிவீரா?

சேனாதிபதி: புத்தகத்தில் அப்படி யுள்ளது. காரியத்தில் மோசம் போனதே? தெய்வ வாக்குக் கூட இந்தக் கொலைகாரியால் பொய்த்ததே!

பூசாரி: தெய்வவாக்கு ஒருகாலும் பொய் யாகாது.

சேனாதிபதி: ஆ, அஃது உண்மையா யிருந்தால், அந்தக் குழந்தைகளில் யாராவது பிழைத் திருந்தால்........!

பூசாரி: என்ன செய்வீர்? அரசிளங் குமரனொரு வன் இப்போதிருந்தால் என்ன செய்வீர்!

சேனாதிபதி: அப்படியே 'எம் அரசே!' என்று காலில் விழுந்து பணிவேன். எனது சேனை முற்றும் அவரைக் காக்கும். இந்த அரக்கியை வீழ்த்தி, எம் மன்னனுக்கு முடி சூட்டுவேன்.

பூசாரி : உண்மை தானா ?

சேனாதிபதி : ஆம், இவ்வளவு துணிவாகப் பேசுகிறீரே! ஆனால், உம்மிடம் அரசிளங் குமரனொருவன் உளனோ?

பூசாரி : நண்பரே, இன்று பூசை மணியடித்ததும், உம் மன்னனைக் காக்கச் சேனையைத் தயாராக்கும்! கொடுங்கோலை இன்று கவிழ்ப்போம் ; செங்கோலை அரியணை யேற்றுவோம்!

சேனைத் தலைவன் திகைத்தான், களித்தான்! பூசாரி அவனை உள்ளே யழைத்துச் சென்றான். பத்து நிமிஷம் கழித்துச் சேனாதிபதி ஆனந்த பரவசத்துடன் வெளியே போந்தான்.

8

உள்ளே நடப்ப தென்ன ? கோயிலுள் பூசாரி என்ன செய்கிறார்? ஓசைபடாமல் வாருங்கள் ! பார்ப்போம் : நள்ளிரவு ! ஊர்ச் சத்தம் அடங்கி யுள்ளது. பால்சாமி வணக்க அமளியில் குடித்துக் களித்து அத்தாலிக் கும்பல்கள் உணர்வற்றுக் குறட்டை வாங்குகின்றன. எருசலம் கோயிற் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. வாசலில் ஒரு நம்பிக்கையான காவற்காரன் மட்டும் உலாவிக்கொண்டிருக்கிறான். உள்ளே அணியணியாகப் பூசாரிகள் போருடை தரித்து நிற்கின்றனர். சுமார் ஆயிரம் பேர் இருக்கும்!

பட்டென்று பூமிக்குள் ஒரு கதவு திறக்கிறது. எல்லாரும் உள்ளே சென்று பள பளப்பான வாட்படை யேந்தி வெளியே வருகின்றனர். யோதான் அவர்களை ஆவேசப் படுத்துகிறான் :

"நண்பர்களே! தாவீது மரபின் காப்பாளர்களே! அதருமத்தை வீழ்த்தி, தருமத்தை நிலைநிறுத்தும் நாள் நாளைதான்; கவனமாயிருங்கள்! தாவீது மரபிற்குரிய அரசச் சின்னங்களெல்லாம், இதோ, இங்குள்ளன. வழக்கப்படி நமது கோயிலில் அரியணையமைத்து, அரசிளங் குமாரனை அலங்கரித்து, முடிசூட்டி மகிழ்வோம். யூதியாவின் அரசன் யோவானே என்று நாளை பத்து மணிக்கே விளம்பரம் செய்வோம். அரசாங்கச் சேனைகளெல்லாம் நமது பக்கம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தக் கொடுங்கோலரக்கியின் உத்தரவை நிறைவேற்ற, கொலைகாரர் சிலரே முன்வருவர். அவள் கொலைப் படைக்கு உத்தரவிடுமுன்பே, நீங்கள் உங்கள் கடமையைச் செய்ய வேண்டும். சென்ற ஐந்தாண்டுகளாகப் போர்ப் பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். ஏராளமான ஆயுதங்களும் உள்ளன........தரும யுத்தம் செய்து அதருமத்தை ஒழியுங்கள்!"

எல்லாரும் பூசாரியின் சொல்லை ஆமோதித்துப் போற்றினர். பிறகு சிறிது வாட் பயிற்சி நடந்தது. கூட்டம் கலைந்தது.

9

திருவிழாமணி அடித்தாயிற்று. யோவானைச் சிங்காரித்து அரியணையேற்றிப் பூசாரிகளெல்லாம் இராஜ விசுவாசம் கூறியாயிற்று. அப்போதுதான் யோவானுக்குப் பூசாரி அடிக்கடி தன்னிடம் சொல்லிவந்த விஷயம் புரிந்தது. 'தான் ஒக்காசனின் பிள்ளை, பட்டத்திற்குரியவன்; அத்தாலி தனக்குரிய அரசைப் பலாத்காரமாக ஆளுகிறாள்' என்பதை அவன் அறிந்தான். அப்போதே அவனுக்கு ஒரு பெரிய போர்வீரனின் சக்தி யுதித்தது: "தந்தையே, உண்மை யறிந்தேன்; தங்கள் சொற்படி யூதிய மன்னனாகி, அறங் காப்பேன்!" என்று அவன் வாக்களித்தான். மேள தாளங்கள் முழங்கின!

அத்தாலி வீராவேசத்துடன் ஓடிவந்தாள். படைகளெல்லாம் அணிவகுத்து நின்றன. "படை வீரர்களே, இடியுங்கள் கோயிலை! வெட்டுங்கள் பூசாரிகளை! இதோ, என் கையினால் அந்தப் பகைவனை வெட்டுகிறேன்!" என்று கோயிலுக்குள் பாய்ந்தாள் அரக்கி! உள்ளே அவள் அடிவைத்ததும், சட்டென்று கதவை மூடினர் பூசாரிகள். அவளுக்குத் துணைவந்த படைகள் வெளியே நின்று ஆர்ப்பாட்டஞ் செய்தன.

அத்தாலி: சதிகாரப் பூசாரி எங்கே?

பூசாரி: இதோ தயார்? என்ன செய்ய வேண்டும்?

அத்தாலி: உன்னை வெட்டி இங்கே புதைக்க வேண்டும்?

பூசாரி: காரணம்? ஏனம்மணி இவ்வளவு ஆவேசம்?

அத்தாலி: நீ இராஜ விரோதி! சதிகாரன்! என்னரசைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்தாய்!

பூசாரி: நான் இராஜ பக்தன்; அதருமம் செய்யும் இராணிவிரோதி. உனக்கு இந்த அரசில் எவ்வுரிமையும் இல்லை.

அத்தாலி: பின் யாருக்கு இந்த யூதியா உரிமை? பாதகா!

பூசாரி: யாருக்கா? காட்டுகிறேன் வா! இதோ பார், யோவான்! ஒக்காசனின் பிள்ளை! நீ கொன்று குவித்த இளவரசர் கும்பலில், தெய்வாதீனமாக இக் குழந்தை உயிரோடிருந்து தப்பினன்! இவன் தாவீதின் குலக்கொழுந்து; யூதியா இவனுக்கே உரியது.

அத்தாலி: ஆ! இந்தப் பழிகாரக் குழந்தையை இதோ வெட்டுகிறேன்!

பட்டென்று பூமிக்குள் கதவு திறந்தது. ஆயிரம் பூசாரி வீரர் கிளம்பினர். அத்தாலி, "சேனே, சேனே! அபாயம், அபாயம்!" என்று கதறிக்கொண்டே வாட்கணங்களால் கண்ட துண்ட மாக்கப்பட்டுக் கீழே விழுந்தாள். சேனாதிபதி இதற்குள், யோவானுக்கு முடி சூட்டப்பட்டதாக எங்கும் விளம்பரம் செய்தான். யோவானை அனைவரும் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அரியணையில் அமர்த்தி வாழ்த்தினர்.

---

3. அலெக்சாந்தர் (ALEXANDER)

நமது நாட்டை அலெக்சாந்தர் படை யெடுத்தது எல்லாருக்குந் தெரியும். அச் சம்ப வத்தைக் கொண்டு ஐரோப்பாவில் பல கதை களும் நாடகங்களும் வழங்குகின்றன. நம் இந்திய வீரன் போரஸ் என்ற புருஷோத் தமனைக் கதாசிரியர்க ளெல்லாரும் வியக் கிருர்கள். ராஸீனும் இச் சம்பவத்தை வைத்து அரியதொரு நாடகம் எழுதி யிருக்கிருன்; அதில் இந்தியப் பெயர்களைக் கிரேக்கப் பெயர்களாக மாற்றியிருக்கிருன்; இடையே ஒரு காதலையும் புகுத்தி யிருக்கிருன். கதை பழைய ஆசிரியர் களிடம் கடன் வாங்கியதே! "போரஸ் வீரம்" என்பதே மூலத்தில் இக்கதையின் தலைப்பு.

இந்திய மன்னருள் **புருஷோத்தமன், தக்ஷன் (Porus, Taxile)** என்னும் இருவர் புகழ்பெற்ற வீரர். இருவரும் **இலக்குமி (Axiane)** என்ற ஓர் அரசியைக் காதலிக்கின்றனர். **அலெக்சாந்தர்** இவர்கள் நாட்டின் (பாஞ்சாலம்) மீது படை யெடுத்து வருகிருன். போரஸ் அன்னியனை எதிர்த்துப் போர்புரிய ஊழித்தீப் போலக் கிளம்

புகிறான். தக்ஷனுக்குச் சுசீலை (Cleofile) என்ற தங்கை யிருந்தாள்; கட்டழகி. அவள் அலெக்சாந்தரைக் கண்டதும் காதலிக்கிறாள்; தன் அண்ணனிடம், "இந்த வீர வாலிப மன்னனுடன் சமாதானமாகப் போ!" என்று மன்றாடுகிறாள். தக்ஷன் அவ்வாறே செய்து, புருஷோத்தமனையும் அலெக்சாந்தருடன் சமாதானம் செய்து கொள்ளத் தூண்டுகிறான்:

தக்ஷன்: அரச, புருஷோத்தம, அலெக்சாந்தர் பெரிய சேனை கொண்டுவந்திருக்கிறான்; அவன் பல அரசுகளைத் தவிடுபொடியாக்கிய போர் வீரன். பாரசீகத்தில் அவன் பெற்ற வெற்றியை நாம் அறிவோம். சமாதானமாகப் போனால், அவன் நமக்கு நன்மை செய்வான்!

புருஷோத்தமன்: தக்ஷ, என்ன சொன்னாய்? அன்னியனொருவன், எங்கிருந்தோ வாளும் தீயும் கொண்டு அசுர வேகத்துடன் நமது நாட்டில் நுழைந்தான்; நம் குடிமக்களைக் கொன்றழித்தான்; கிராமம் கிராமமாகத் தீவைத்து அழித்தான்! நமது சாது நாட்டிற்குத் தீது செய்யும் இந்த அன்னியனுடனே சமாதானம் பேசுவது? நமக்குப் பலமில்லையா? நாம் பேடிகளா? அப்படி நாம் வலுவில் இணங்கினாலும், வந்தவன் வெறுங் கையனாகப் போவானா? 'அன்னி

யன் போர் தொடுத்தான்; சுதேசி அவனை வணங்கி இணங்கினன்' என்ற பழிச் சொல்லை நாம் பொறுப்பதா? அதைவிட, இரத்தம் சிந்தி இறப்பதே புகழாகும், புண்ணியமாகும்!

தக்ஷன்: புருஷோத்தமா, டேரயஸ் பட்ட பாட்டை நினை! சமாதானமாகப் போனல் இரத்தஞ் சிந்தாது; நீ ஒருவன் வாளெடுத்துப் பாய்ந்தால், ஆயிரக்கணக்கான போர் வீரர் இறப்பர். அலெக்சாந்தர் மகா சூரன். நீ அவனிடம் செருக்காடுவது தகாது. பேசாமல் சமாதானமாகப் போவோம்; சாது ஜனங்கள் நம்மை வாழ்த்துவர்.

புரு: தக்ஷா, பேடிகள் வாழ்த்து நமக்குத் தேவையில்லை. வந்த பகைவன் வரம் பெற்ற சூரனனலும், ஒருகை பார்த்தே தீருவேன்; அடிமையாக வாழ்வதைவிட ஆண்மையாகச் சாவதே மேல்! இன்று புகுந்த அன்னியனுடன் கைகுலுக்குவது நமது தேச மாதாவுக்குத் துரோகம் செய்ததாகும். சரித்திரம் உள்ளமட்டும் நமது தொடைநடுங்கிச் — சிறுமையை உலகம் பழிக்கும். வாய்ப்பேச்சு போதும், வா; வாளால் அவனுடன் பேசுவோம்! உனக்குப் பயமாயிருந்தால், விலகிப்போ! நான் தனியாக அவனை எதிர்க்கிறேன்; ஆனல்

அவனுடன் சேர்ந்து வழிகாட்டிக் கொடுத் தாயோ, நீயும் என் வாளுக்குப் பதிற் சொல்ல நேரிடும்; உஷார்!

தக்ஷன், தங்கை சுசீலை சொற்படியே நடந்தான். அலெக்சாந்தர் சுசீலையைக் காத லித்ததால், இருவரும் சமாதானமாகப் போனார் கள். இலக்குமி தக்ஷனை வெறுத்தொதுக் கினாள்; புருஷோத்தமன் ஆண்மையை மெச் சிப் புகழ்ந்தாள்: "என் பெண்மை அந்தப் பேடி முகத்தில் இனி விழிக்காது; அஞ்சா வீர னை உன்னையே விரும்பும்; அந்தத் தக்ஷன், தங்கையின் பேச்சைக் கேட்டுத் தனது ஆண் மையை அன்னியனுக்கு அடகு வைத்தான்; இந்தச் சுசீலையும் வந்த அன்னியனை வலை போட்டுப் பிடித்திருக்கிறாள்; வெட்கங் கெட்ட வள்! சை! இனி, இவர்களை நினைப்பதும் சிறுமை; புருஷசிம்மமே, செல் போர்முனை! உமக்கே இலக்குமி — விஜயலக்ஷ்மி!..........." என்று வீரக் குமரி விடைகொடுத்தாள்!

புருஷோத்தமன், தக்ஷன் இருவருக்கும் அலெக்சாந்தர் ஒரு சமாதானத் தூதனுப்பி னான். தக்ஷன் சமாதானமானான்; இலக்குமி சொல்லியும் கேட்கவில்லை. புருஷோத்தமன், "நான் ஒரு துளி இரத்தம் உள்ள மட்டும், எனது நாட்டின் மானத்தை வாள்முனையில் காத்தே தீருவேன்" என்று மார்தட்டினான்.

அலெக்சாந்தருக்கும் புருஷோத்தமனுக்கும் கடும் போர் நடந்தது; அன்னியப் படை திணறிப் போனது. இடையில், துரோகியொருவன் வழிகாட்டித் தந்தான்; அலெக்சாந்தர் புருஷோத்தமனை வென்றான்; புருஷோத்தமன் மறைந்தான். அலெக்சாந்தர் தக்ஷனின் தங்கை சுசீலையினிடம் தனது காதலைத் தெரிவித்தான்; தக்ஷனுக்கு எப்படியாவது இலக்குமியை இணக்கித் தருவதாக உறுதி கூறினான். இதற்குள் புருஷோத்தமன் போரில் இறந்ததாக யாரோ கட்டிவிட்டு, வதந்தி பரவிற்று. இலக்குமி அவனுக்காகக் கண்ணீர் விட்டாள்; அச்சமயம் அலெக்சாந்தர் தக்ஷனை மணம் புரியும்படி அவளை வற்புறுத்தினான். "புருஷசிம்மனான அந்த வீராதிவீரனை விரும்பிய மனம், இந்தப் பூனைக் குட்டியையா விரும்பும்? என் ஆயுளைத் தனிமைக் கண்ணீரில் கரைத்தொழிப்பேனேயொழிய, இந்தப் பேடி தக்ஷனைக் கனவிலும் கருதமாட்டேன்!" என்றாள் இலக்குமி.

அவள் மனங்குளிர ஒரு செய்தி திடீரென வந்தது: புருஷோத்தமன் இறக்கவில்லை; இன்னும் படைகளைத் தூண்டவே மறைந்திருந்தான்; அலெக்சாந்தர் அவனைச் சிறைப் பிடித்தான்; தக்ஷனுடன் சமாதானம் செய்து கொண்டு இலக்குமியை அவனுக்குத் தர வற்புறுத்தினான். "நாட்டைக் காட்டிக் கொடுத்து,

எனது தேசத்தின் வீரப் பெருமையை அன்னி யருக்கு விற்ற, அந்தப் பயங்காளியுடஞ சமா தானம்?........முடியவே முடியாது!" என்ருன் புருஷோத்தமன்.

இச்சமயம் தக்ஷனின் படைகளே தக்ஷனை எதிர்த்துக் கிளம்பின. போர் நடந்தது; தக்ஷனை வீரனெருவன் முதுகில் குத்தி, "தேசத் துரோகி வீழ்க!" என்று எக்களித் தான். தக்ஷன் இறந்த செய்தி கேட்டுத் தங்கை சுசீலை பரிதபித்தாள். இலக்குமி புரு ஷோத்தமனிடம் தனக்குள்ள உயிர்க் காதலை, அலெக்சாந்தருக்குத் தெரிவித்தாள். அவளே ஒரு படை சேர்த்துப் புருஷோத்தமன் நடத் திய போரைத் தொடர்ந்துவிடுவாள் போல, அவ்வளவு தைரியமாகப் பேசினுள். ஆம், புரு ஷோத்தமனை விடுவித்து, மீண்டும் பெரும் போர் நடத்த ஒரு படை திரண்டது உண்மை! அலெக்சாந்தர் அறிந்தான்; புருஷோத்தம னைப் பார்த்தான்: "அலெக்சாந்தர், நான் உன் கைதி என்று நினைக்காதே; நான் இப்போதும் எப்போதும் வீரன்; என் பெயரைச் சொன் ஞலே நாடு முழுதும் எழுந்து நின்று வாள் வீசி வரும்; என் நெஞ்சில் குமுறும் வீரத் தீ அணையாது" என்ருன் சிங்கம்!

அலெக்சாந்தர்: போரஸ், உண்மை; உன் வீரத்தை மெச்சினேன்; உன் வீரக்கனல்

கோடி நெஞ்சில் பற்றி, என்மேல் குமுறி வரும் என்பதை அறிந்தேன்; நான் உன்னை எப்படி நடத்தவேண்டும்? சொல்!

புருஷோத்தமன்: என்னை அரசனைப் போல மதித்து நடத்து!

அலெக்: அப்படியே; உன் அரசை உன்னிடமே தந்தேன்; ஆண்டுகொண்டிரு! இலக்குமியும் உனக்கே; இருவரும் மங்கலமாக வாழுங்கள்! இதோ என் கைகளால் உனக்கு முடி சூட்டுகிறேன்!

புருஷோத்தமன் இலக்குமியுடன் அரியணை வகித்துச் சுதந்தர நாட்டைச் சுதந்தரமாக அரசாண்டான்!

---

4. எஸ்தர் (ESTER)

உலகில் சுமார் $1\frac{1}{2}$ கோடி (Jews) யூதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் போலந்து, ருஷ்யா, ருமேனியா, அமெரிக்கா, பாலஸ்தீன், ஜெர்மனி, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் முதலிய நாடுகளில் வசிக்கின்றார்கள். யூதர்கள் மதக் கட்டுப்பாடுள்ளவர்கள்; ஹீப்ருவின் சிதைவான இட்டிஷ் (Yiddish) பாஷை பேசுபவர்கள். அம் மொழியில் அரிய இலக்கியங்கள் உள்ளன.

யூதர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். வியாபாரம், கைத்தொழில், சாப்பாட்டுக்கடை, வட்டித் தொழில்—இவற்றில் அவர்கள் செழித்தோங்குகின்றார்கள். பலர் வைத்தியர், வக்கீல், உபாத்தியாயர்களா யிருக்கின்றனர். அவர்களுள் அதிமேதாவிகள் இருக்கிறார்கள்—ஸ்பிநோஸா, டிஸ்ரெய்லி, எய்ன்ஸ்டின், பெர்க்ஸன், ஃப்ருட் (Freud) போன்ற அறிஞரை உலகறியும். யூதர் பெருஞ் செல்வர்; தம்முள் ஒருவர் கையிளைத்தால் கைகொடுப்பர்.

யூத ஜாதி, நீண்ட காலமாக மிகவும் இழிவாக, கொடுமையாக நடத்தப் படுகிறது—கிறிஸ்து ஜாதியால். காரணம், யாரோ யூதர்

சிலர் கிறிஸ்துவைச் சிலுவையிடச் செய்ததே! மோசே, சாலமன், ஏசுநாதர் முதலிய பைபிள்-பெரியார் யூதராகவே பிறந்து வாழ்ந்தனர். கிறிஸ்து மறைந்து வெகு காலத்திற்குப் பிறகே அவர் பெயரால் மதமும், கோயிலும், பைபிளும் எழுந்தன. அன்றுமுதல் யூதர் தாழ்த்தப் பட்டனர். அவர்கள் சேரிகளில் ஒதுக்கமாக வைக்கப்பட்டனர், பழிக்கப்பட்டனர். ஷேக்ஸ் பியரின் '**வெனிஸ் வர்த்தகன்**' என்ற நாடகத்தில் வரும் ஷைலக், அக்காலம் யூதர் எப்படி மதிக்கப் பட்டு வந்தனரென்பதைக் காட்டுகிறான்.

கால முன்னேற்றத்தால், மனம் தாராள மானது; சமுதாயச் சட்டங்கள் விட்டுக்கொடுத் தன; யூதரும் அந்தந்த நாட்டுப் பழக்க வழக் கங்களைக் கைக்கொண்டனர்; கலப்பு மணங் களும் நடந்தன. இருபதாம் நூற்றாண்டில், யூத—கிறிஸ்தவ முரண்கள் ஒருவாறு அடங் கின. யூதர் முன்னேறினர். அவர்களுடைய முன்னேற்றம் சிலர் பொறாமையைத் தூண்டி யது. மீண்டும் யூத சமுதாயத்திற்குப் பரிதாப மான ஆபத்து வந்தது. நாஜி ஜெர்மனி, யூதரை வேரறுக்கத் தொடங்கிவிட்டது; அவர் களுக்குத் தனிச் சொத்துரிமை கிடையாது; நாட்டில் நிலைப்பில்லை. யூதர் ஆயிரக் கணக் காக நாஜிக் கொடுமைக்குப் பலியாகின்றனர். [ஒரு கதை யுண்டு: யூத விரோதியான கிறிஸ்து

மன்னனெருவன் கோயிலுக்குத் தொழுகை காண வந்தான்; வந்தவன், "யூதர்கள் எல்லோரும் வெளியேறுங்கள்!" என்று கூவினுன்; அங்கே ஒளிந்திருந்த ஏசுநாதரே முதலில் வெளியேறிவிட்டாராம்—ஏசுநாதரும் யூதரே!]

*   *   *

இன்று யூதர் படும்பாட்டை நினைத்தால் ராஸீன் எழுதிய **எஸ்தர்** நாடகம் நினைவிற்கு வருகிறது. அந்நாடகக் கதையைக் கேளுங்கள்:

1. "எஸ்தர்"

எஸ்தர் யூத வுத்தமி; சிறந்த தெய்வ பக்தை; சிறு வயதில் அவள் பெற்ருேரை யிழந்து அநாதையானுள். அவள் சிற்றப்பன் **மார்தோஷே** அவளை எடுத்துப் பரிவுடன் வளர்த்தான்; கல்வி பயிற்றினுன்; சமய ஞானம் புகட்டினுன். எஸ்தர் குணத்திலும், அறிவிலும், அழகிலும், அன்பிலும் சிறந்து விளங்கினுள்.

அவள் அழகு, பாரசீக மன்னனுன **அஸ்ஸுயேரன்** மனத்தைக் கவர்ந்தது; தன் வாழ்விற்கும், அரசிற்கும் அவளே மங்கள ஜோதியாவாள் என்று மன்னன் உணர்ந்தான்; தனது விருப்பத்தை வெளியிட்டான். எஸ்தரும் அரசனை விரும்பினுள்; ஆனல், தன் பெயர், பிறப்பு, சமயம் எதையும் அரசனிடம்

சொல்லவில்லை; அது சிற்றப்பன் கட்டளை. சாதி சமயம், ஊர் பெயர், வேறுபாடுகளைக் காதல் மறந்தது. இருவரும் மனமொன்றி இல்லறம் நடத்தினர். எஸ்தர் தன் கணவனுக்குத் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் அரிய துணை செய்தாள். அரசனுக்குத் தெரியாமல் அவள் யூதாசாரங்களைக் கடைப்பிடித்தாள்; யகோவா பக்தி செய்தாள்; சிறுமிகள் பலரை யூத வொழுக்கத்திற் பழக்கினாள்; இனிய பக்திப் பாடல்கள் சொல்லித் தந்தாள். அரசனுடன் இருக்கும் வேளை தவிர மற்ற வேளைகளில், தெய்வ மகிமைகளைக் கேட்பதும், பாடுவதும், ஜபம் செய்வதுமாகக் காலங் கழித்தாள். அவளுக்கு ஒரே அந்தரங்கத் தோழி-எலிஸ்; இவள் ஒருத்திக்கே எஸ்தரின் பிறப்புவளர்ப்புகள் தெரியும்; வேறு யாருக்கும் அவள் யூதப் பெண் என்பது தெரியாது. அரசன் அவள்மீது உயிர் வைத்திருந்தான். இருவர் அன்பும் உள்ளத்தில் வேரூன்றி வளர்ந்தன.

2. அமான்

எஸ்தர் மனத்தில்மட்டும் ஓர் ஆறாத் துயர் குடிகொண்டிருந்தது; அது தனது யூத ஜாதி படுந் துயர்தான்! அக்காலம் யூதரைப் படுகொலை செய்து வந்தனர், பாதகர் சிலர்.

அப்பாதகருள் அமான் ஒருவன்; அவன் அஸ்ஸூயேரனுக்குப் பிரியமான நண்பன்,

மந்திரி. அவன் வைத்தது சட்டம். அவன் சுத்த அகம்பாவக் குடுக்கை; எல்லாரும் தன் சொற்படியே நடக்க வேண்டும், தனக்கே அடிமை செய்யவேண்டும் என்று நினைப்பவன்; அரசன் கூடத் தனக்கு அடிமை என்பவன்; அவன் பீடத்தில் தான் உட்காரவும் ஆசை கொண்டவன். அவன் சொல்லுக்கு எதிரில்லை; யாராவது மூச்சு விட்டால், உயிர் போய் விடும். ஆயிரம் ஒற்றர்மூலம் அவன் மூலை முடுக்கு களில் நடப்பது, பேசுவதெல்லாம் அறிவான்; தன்னை எல்லாம் அறிந்தவ னென்று சொல் லிக் கொள்வான். எனினும், அவனையும் எதிர்த்துக் 'குற்றம் குற்றமே' என்று நின்ற னர் யூதர் சிலர்.

அவர்களுக்கு எஸ்தரின் சிற்றப்பன் மார்தோஷே தலைவன். அமான், யூதர் மேல் தனது சினவெறி யெல்லாந் திருப்பினன்; யூதர்களை வேரோடு வெட்டிக் குவிக்க முனைந் தான்; ஆயிரக் கணக்கான கொலையாளிகளைச் சேர்த்தான்; பள பள வென்று கூரான வாள் களைத் தந்தான்; அரசனிடம், "அரசே, இந்த யூதர் பொல்லாத சூழ்ச்சிக்காரர்; இவர்கள் உன் அரியணைக்கே வெடி வைக்கிறார்கள்; இந் தக் கும்பலைக் கொத்தோடு அழித்து மண்ணைக் காமற் போனல், அரசு உன்னதன்று"....... என்று கோளேற்றித் தூபம்போட்டு, மன்னன்

உத்தரவையும் பெற்ருன். யூத சமுதாயம் முழுதும் அழிய இருந்தது. இதோ, கொலையாளிகள் கிளம்ப இருந்தனர்.

3. மார்தோஷே

அச்சமயம் மார்தோஷே எஸ்தர் முன் தோன்றினன். எஸ்தர் திவ்யநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தாள். "எஸ்தர், நமது மரபே நாசமாகப் போகிறது; அந்தப் பாவி அமான் கொலைகாரரை ஏவி விட்டான்; வாட்கள் பள பளக்கின்றன; இதோ, கொடிய இரத்த வெள்ளம் பாயப் போகிறது! எஸ்தர், எஸ்தர், உன்னலே தான் நம் மரபு வாழ வேண்டும். செல்; உன் கணவனை மன்னனிடம் சொல்!" என்று முறையிட்டான். "ஆ யகோவா, என்ன கொடுமை, உன் பிள்ளைகளைக் காவாயோ?...." என்றழுதாள் எஸ்தர்.

மார்தோஷே: எஸ்தர், அழுவதிற் பயனில்லை; செயலுக்குரிய காலத்தை வீணுக்காதே! அமானின் வாள் கண்ணீருக்கு இரங்காது. கணவனைத் திருப்பு!

எஸ்தர்: எப்படிச் சொல்வேன்! 'உனக்கென்ன யூதர் இறந்தால்?' என்பார்; நானுமொரு யூதச்சி என்ருல், முதல் வெட்டு என் கழுத்தில் விழும். கணவன் சீறிச் சினப்பார்.

மார்தோஷே: எஸ்தர், உன் குலம் அழியும் போது, உன் உயிர் வெல்லமா? எஸ்தர், யகோவா துணை செய்வார்; ஒரு மனிதன் கோபம் என்ன செய்யும்? உயிர் உன்னதா? உடல் உன்னதா? இரண்டும் ஆண்டவன் உடைமை; உன் இரத்தம் உனது யூத சமுதாயத்தைச் சேர்ந்தது; உனது சமுதாயத்தைக் காக்கவே இறைவன் உன்னைப் படைத்தான்: அவன் எல்லாம் வல்லவன்! அவன் நினைத்தால், பகைவரைத் தூசிபோல் ஊதியெறிவான். உலக மன்னரெல்லாம் திரண்டாலும் அவனுக்கிணையாவாரா? வானும் புவியும் காற்றுங்கனலும் படைத்த பரமபிதாவை நம்பு; உன் கடமையைச் செய்! மற்றதை அவன் செய்வான். அவனே என்னை ஏவினான்; உன்னால் நமது மரபு வாழும் என்றான். எஸ்தர், என் ஆணை அவனாணை! இதை நிறைவேற்றுவதில், நீ இறந்தால் என்றும் வாழ்வாய்; தியாகமே உன்னைச் சிரஞ்சீவியாக்கும்; செல்!............நானும் வேண்டியதைச் செய்கிறேன்.

எஸ்தர்: எந்தையே, செல்கிறேன்; ஆம், அரச வாழ்வு என்ன வாழ்வு? இந்தப் பொன்னணி போட்டு மின்னவோ பிறந்தேன்? பொன்னும், போகமும் புளித்தன. என்

னுயிரை இறைவனுக்காக, என் மரபுக்காக, பலர் வாழத் தருவேன். கணவரிடம் சமயம் பார்த்து உண்மையைச் சொல்லி மன்றாடுகிறேன். என்னுயிர் உள்ளமட்டும் ஒரு யூதன் மேலும் வாள்பட வொட்டேன். அந்த அமானின் வஞ்சகத்தையும் வெளியாக்குவேன் !

எஸ்தர் இறைவனை வணங்கி மன்னனிடம் சென்றாள்.

4. அரசன் கனவு

இச்சமயம் அரசன் ஒரு பயங்கரமான கனவு காண்கிறான் : நாட்டில் ஒரு புரட்சிப் புயல் எழுந்து, தன் உயிருக்கே அபாயம் வருகிறது ; அந்த அபாயத்திலிருந்து யூதனொருவன்—மார்தோஷே—தன்னைக் காப்பாற்றுகிறான். அரசன் திடுக்கிட் டெழுந்து, கனவைப் பற்றிச் சிந்திக்கையில், மார்தோஷே வந்திருப்பதாக அறிகிறான். அவனுக்குச் சரியான வெகுமானந் தந்து மரியாதை செய்யத் தீர்மானிக்கிறான்.

இதே சமயம் அமான் வருகிறான். யூதர்களைப் பற்றிப் பொய்யும் புளுகும் சொல்லுகிறான் ; மார்தோஷேயை முதலில் கொல்லவேண்டு மென்கிறான். அரசன், "அமான், என் விருப்பத்திற்கு எதிர் செய்யாதே! இன்று

நான் மார்தோஷையைப் பெருமை செய்யப் போகிறேன்; எஸ்தர் விருந்து வைக்கப் போகிருள். நீ அந்த யூத உத்தமனை வணக்கமுடன் வரவேற்று அழைத்து வா!" என்ருன். இச் சொல் அமான் நெஞ்சைத் துளைத்தது. "ஐயோ, பரம சத்துருவான அந்த யூதனையோ நான் வரவேற்பது, வணங்குவது, மரியாதை யாக அழைத்து வருவது?........அட, சை........ அசம்பாவிதமே......கஷ்டமே!" என்று அவன் தலையில் கைவைத்துக் கலங்கிச் சென்ருன்; அரசனைக் கவிழ்த்துத் தானே அதிகாரத்தைக் கைப்பற்றி, யூதர்களை ஒழிக்க வேண்டுமென்று பகற்கனவு கண்டான்.

அரசன் கண்ட கனவில் உண்மை யுண்டு; நாட்டில் புரட்சிப் புயலைக் கிளப்ப, அமானே முயன்ருன். இங்கே நகையாடி அரசனை நயந்து தனதாக்கி, அங்கே சதிக் கூட்டம் சேர்த்துப் பகையாடி, அரசன் உயிருக்கே உலைவைக்க முயன்ருன். கனவு கண்டதும் அரசன் கண்விழித்தான்.

5. என் உயிரே!

அவனுள்ளம் இன்னும் நடுங்கிக் கொண் டிருந்தது. அமான் வந்து சென்றதும், எஸ்தர் வந்தாள். அவள் தோழி தோளில் சாய்ந்து

வெயிலில் வாடிய இளங்கொடி போல், சோர்ந்து, நொந்து, தளர்ந்து வந்தாள்.

அரசன் : அரசீ, உன் மலர் முகம் வாடியதேன்? உன் மனங் கலங்குவதேன்? நீ என் உயிர்; நானிருக்க விசனமேன்?

எஸ்தர் : ஆ தோழீ, என் உயிர் துடிக்கிறதே!

அரசன் : ஆ, இஃதென்ன? கண்ணே! உன்னுயிர் என்னுயிரன்றோ? நீ என்னிற் பாதியன்றோ? என் அரசில் உனக்குப் பாதி சொந்த மன்றோ? உனக்கென்ன குறை? சொல் உண்மையை..........!

அரசி : ஆ, நாதா, உண்மையைச் சொல்ல நா எழவில்லை; நெஞ்சடைக்கிறது; செய்தியைக் கேட்டால், இடி விழுந்தது போலத் திகைப்பீர்கள்; என்னைச் சுட்டுச் சாம்பலாக்குவீர்கள்..........!

அரசன் : கடவுளே, இஃதென்ன சொல்! எஸ்தர், அமைதி, அமைதி! நீ என் தலைவி; என் மனத்தை ஆளும் அரசி; என் அரசின் சிகர ஜோதி நீயே........சொல் உன் உள்ளத்தை! உன் விருப்பத்தை உடனே நிறைவேற்றுகிறேன்.

அரசி : அரசே, வந்தனம்; தங்கள் கருணையிருக்குமானால் ஒரு வேண்டுகோள்;

இன்று நான் வைக்கும் விருந்திற்கு, என் குருநாதனை, என்னைப் பேணிய தந்தையை, மார்தோஷேயை அழைக்க வேண்டும்; அத்துடன் தங்களுக்குப் பிரிய மான அமானும் வரவேண்டும். இருவர் முன்பும் என் இரகசியத்தை, என் உண் மையை, என்னை வருத்தும் துயரை விளக்குகிறேன். இதுவே என் வேண்டு கோள்........!

அரசன்: எஸ்தர், இதற்குத்தானு வருத்தம்? இதோ அந்த உத்தம யூதனையும், என் அமானையும் உடனே வரச் செய்கிறேன்!

அரசி அரசனுக்கு வந்தனஞ் சொல்லி, விருந்து தயாரிக்கச் சொல்லுகிருள். அரசி யின் மாணவிகள் இனிமையான தியாக பலிப் பாடல்களைப் பாடுகின்றனர்: "இறைவனே, நாங்கள் உன் பிள்ளைகள்; எங்களுக்கு இன்று சோதனை நாள்; கொடியனெருவன் எங்கள் குலத்தை வேரறுக்க கத்தி தீட்டிவிட்டான்; அவன் வாள் எங்கள் இரத்தத்தைக் குடிக்கும் போதும், உனது திரு நாமத்தை மறவாது பாடிக்கொண்டே எங்கள் ஆவி இந்த மண்ணு டலை விட்டு உனது பொன்னடி புகத் திருவருள் செய்!........வேறு புகலில்லை. இந்தத் துன்ப உலகை விட்டொழித்து, உன் இன்ப விண்

ணில், தேவதைகளுடன், உன் புகழ் பாடும் மகிழ்வைத் தந்தருள்! போற்றி பெருமானே!''

6. அழைப்பு

அமான் தன் மனைவியிடம் அவமானத்தைச் சொல்லிப் புகைந்தான்:

"நன்றி கெட்ட காட்டுமிராண்டி அரசன்; நான் அவன் இழவுக்கு என்ன பாடுபட்டேன்! ஒரு பட்டம், பதவி, அதிகாரம், கிரீடம் வருமென்று பார்த்தேன்; என்னை வெறுத்தெதிர்த்து, என் சூழ்ச்சியை முறியடிக்கும் அந்த யூதனை அழைக்கச் சொல்லுகிறானே.... பாவி....!'' என்று குமுறினான்.

"நாதா ஆபத்து, பெரிது; என் மனம் ஐயுற்று நடுங்குகிறது; நாளை என்ன வருமோ.... ....நினைக்கக் கூடப் பயமா யிருக்கிறது. பேசாமல் இருவரும் இருக்கிற சொத்தைச் சுருட்டிக் கொண்டு ஓடிப் போவோம்'' என்றாள் மனைவி.

இதற்குள் அரசன் விருந்திற்கு அழைப்பு வந்தது. உதட்டில் புன்னகையும், உள்ளத்தில் வன்பகையுங் கொண்டு சென்றான் அமான்.

7. உண்மை வெல்கிறது!

விருந்து கமகமக்கிறது; விருந்தாளிகள் அனைவரும் வட்டமாக வீற்றிருக்கின்றனர்—

அரசன், அரசி எஸ்தர், தோழி எலிஸ் முதலி யோர்; சிறுமிகள் இனிமையாகப் பாடுகின்றார் கள். மார்தோஷே அப்புறம் நின்று சமயம் பார்த்திருந்தான். விருந்துடன் அரசன் பேச் சைத் தொடங்குகிறான்:

அரசன்: எஸ்தர், வேண்டியதைக் கேள்; பாதி யரசு வேண்டுமா? தருகிறேன்.

எஸ்தர்: நாதா! அரசும் செல்வமும் வேண் டேன்; தங்கள் காலில் விழுந்து கெஞ்சு கிறேன்; என்னுயிரைக் காக்க வேண்டும். பரிதாபமான ஜனங்களுக்கு உயிர்ப் பிச்சை தரவேண்டும்.

அரசன்: அரசீ! உன் உயிருக்கென்ன நேர்ந் தது? எந்த ஜனங்கள்....................விளக்க மாகச் சொல்லு!

எஸ்தர்: அரசே! அருள் கூர்ந்து கேளும். தாங்கள் இவ்வளவு அன்புடன் நேசிக்கும் எஸ்தர் ஒரு யூதப் பெண்!

அமான்: ....ஆ...........அப்படியா, ஊம்!

அரசன்: ஹா, நான் உயிர்போல் நேசிக்கும் நீ யூதன் மகளா? ஹூம்...........!

எஸ்தர்: அரசே, நான் சொல்வதை முழுதும் கேட்டுப் பிறகு விருப்பப்படி செய்யுங்கள்!

அரசன் : சொல், உன் கதையை..........!

எஸ்தர் : அரசே, நமக்கெல்லாம் மேலே பரலோகத் தந்தை யொருவன்-இறைவனொருவன் - இருக்கிறான்; நாமெல்லாம் அவன் குழந்தைகள்; அவன் சமரஸ ஜோதி; அவன் கருணை எல்லாருக்கும் உண்டு; அதற்குச் சாதி மத வேறுபாடில்லை; கோடி அரசர் சேர்ந்தாலும் அவன் கால் தூசி பெற மாட்டார்கள்! அவன் நினைத்தால் ஆகாததில்லை; அவன் கோபம் ஊழித் தீப்போல உலகை யழிக்கும்; முன்னே வெள்ளத்தால் நாடழிந்தது தெரிந்ததே. அரசே, அந்த உயிர்த் தந்தைக்கு நாம் பயந்து நடக்கவேண்டும். அவனுக்கு மத வேறுபாடில்லை. அவன் தருமத்தைக் காத்தவர்கள், மோஸே, சாலமன் போன்ற யூதர்! நான் அவர்கள் வழியில் தோன்றியவள்; என்னவர், எவருக்கும் தீமை நினைக்காதவர்; தெய்வ பக்தி நிறைந்த உத்தமர்; பாடுபட்டுப் பிழைப்பவர். அத்தகையோர்களை, என்னவர்களைக் கொல்லத் தீட்டுகிறான் கத்தியை, உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அகம்பாவக் கொடியன்.

அமான் : ஆ—நானா கொடியன்?

அரசன் : சட்! நீ வாயைமூடு! அரசி பேசட்டும்.

அரசி: அரசே, இந்தக் கொடும்பாவி, நட்பு மினுக்கும் நச்சுப் பகைவன்! பசுத்தோல் போர்த்த புலி! இவனே தங்களுக் கெதிராகப் பகைவரைத் தூண்டி விட்டவன்; தங்களையும் என்னையும் கொன்று அரசைக் கைப்பற்றி யாளப் பேராசை கொண்டவன். இவன் புரட்சியையும் துரோகத்தையும் கண்டு பிடித்துத் தங்களுக் குதவி செய்தவன் என் சிற்றப்பன், என்னை வளர்த்துப் பேணிய மார்தோஷே......! அவன் மகான், புனிதன், புண்ணியன்!

அரசன்: அப்படியா.......அட துரோகி! வாள் போற் பகைவரை விடக்கேள் போற் பகைவர் கொடியர். இதோ நான் மார்தோஷேயிடம் பேசி உண்மையை ஆழ்ந்தறிந்து வருகிறேன்.

அரசன் சென்றான். மார்தோஷே இன்னும் விவரமாக அமான் கொடுமைகளைச் சொன்னான். அரசன் மார்தோஷேயுடன் திரும்பி வரும்போது, அமான் அரசியின் காலைப் பிடித்து, "அரசீ, நான் செய்தது பெரும் பிழை. மன்னிக்க வேண்டும்; இனி நான் கவனமா யிருப்பேன்" என்று கதறினான். இப்போதைக்குத் தப்பிக்கொண்டால் பிறகு அரசியைக் குத்திக் கொன்று விடலாம் என்பதே அவன் வஞ்ச நினைவு. அரசன் அமா

னைத் தூக்கு மேடைக்கே அனுப்பினான்; மார்தோஷேயை மந்திரியாக்கினான்; யூதருக் கெல்லாம் அபயமளித்தான்; எஸ்தரைத் தன் அன்புத் தெய்வமாக நேசித்தான். எஸ்தரின் பரிவு யூத சமுதாயத்தையே இரத்த வாளி னின்று காத்தது. அன்று நாடெல்லாம் இறை வனுக்கு நன்றி செலுத்தியது:

"எல்லாம் வல்ல பரம பிதாவே, உலகெல் லாம் உன் கோயில்; உயிர்க் குலமெல்லாம் உன் மக்கள்; ஆக்குவதும் அருளுவதும் அழிப்பதும் உன் செயல்; நல்லவரைக் காக்கிறாய்; பொல் லாத வரை நீக்குகிறாய்; கருணைக்கடலே, அருட் பெருஞ் சோதி ஆண்டவனே, உன் னையே நம்பினோம்; அன்பருக்கு அபயந் தந்தாய்; நன்றி, இறைவா! நன்றி!"

மகாகவி ராஸீன் முற்றிற்று.

Printed at Shakti Press Ltd., Karaikudi. (S. India)